بسم الله الرحمن الرحيم

அலகலாம
AL-KALAM

பததிராதிபா —ஸ அ அபதுல மஜீத

வாலயூம 3	1926ஹு டிசமபாமீ	பகுதி 12

இஸலாமும அமைதியும

(இமாமுல ஹிநது மௌலானா அபுலகலாம ஆஜாத அவாகள எழுதியது)

இடைவிடாத குழபபஙகளும சணடை சசசரவுகளும குடிகொணடிருககும நாடுகளைச சாாநதோா அமைதியினமைக குரிய காரியஙகளிலும கொலை கொளளை முதலிய துாககிருததியஙகளிலும சதா ஈடுபடடு விழுவது சகஜமே எவவாறெனும, அவாகளிடை சமாதான பஙகததிறகுக காரணமானவைகள ஸதிரமாகவிருநது வரும இஸலாம தோனறுவதறகு முனனா அரேபியா அமைதியறற நாடாகததானிருநதது அரேபியாவின பாலைவனததில ஓடிய இரதத வெளளமும, அரேபியரின உடசணடையால ஏறபடட இரதத அலைகளும அரபியரின உணாசசியை யடககமறறதாககி விடடது இதன பயனாக அநநாடடில சமாதானததைக கெடுககககூடிய காரியஙகளும வழிபபறி, கொளளை, கொலை, முதலியவைகளும அடிககடி தோனறிககொணடே யிருநதன

ஹஜஜுககாலததில ஹஜஜாஜிகளின பொருளைக கொளளையிடக கூடிய ஒருவகுபபும அரேபியாவில ஸதிரமாகவிருநது வநதது அவவகுபபு பெரும நிநதனைககுடபடடிருநதது மேலும ஹஜஜாஜிகளைக கொளளையிடுவோா எனனும நாமததை, அவவகுபபுககு அரேபியா சூடடியிருநதது

"பனூதை" யென்னும் வகுப்பில் ஒரு பிரத்தியேகமான கொள்ளைக் கூட்டமிருந்தது. அக்கொள்ளைக் கூட்டமானது, அரேபியாவின் அமைதியைச் சின்னாபின்னப்படுத்திக் கொண்டிருந்தது.

உலகில் இஸ்லாம் தோன்ற வாரம்பித்ததும், அரேபியாவின் எல்லா சக்திகளும் இஸ்லாமை எதிர்க்க முன் வந்தன. ஆகவே, சமாதானமின்மையானது, அதன் குணம், சக்தி, ஐசுவரியம் முதலிய உருவங்களோடு இஸ்லாமையும், இஸ்லாமியப் பிரசாரகர்களையும் பாதித்துக்கொண்டிருந்தது. "ஒரு நாள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் ஒட்டகைகள் 'தீகர்த்' என்னுமிடத்தில் மேய்ந்து கொண்டிருந்தன. அவ்வொட்டகங்களை "கத்பான்" என்னும் வகுப்பார் கொள்ளையிட்டுச் சென்று விட்டார்கள். ("புகாரீ" 5-வது பாகம் 130-வது பக்கம்).

"அக்லுவஅரீனு" என்னும் வகுப்பைச் சார்ந்த ஒரு கூட்டம், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சமுகத்தையடைந்து, இஸ்லாம் மதத்தைத் தழுவி மதினமா நகரில் வசித்து வந்தார்கள். மதினமா நகரின் ஜலமும், காற்றும், இக்கூட்டத்தார்க்கு ஒத்துக் கொள்ளாததை முன்னிட்டு இவர்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சமுகத்தில் முறையிட்டுக்கொண்டார்கள். ஒட்டகையின்பாலையருந்திச் சுத்தமான காற்றின்மூலமாய்ப் பிணிதீர்ந்து பலமுண்டாகும் பொருட்டு, இவர்களை சதகாவின் ஒட்டகைகள் மேயும் திறந்த வெளிக்கனுப்பினார்கள். ஆனால், அவர்கள் சுகமடைந்த பின்னர், இஸ்லாம் மதத்தை விட்டகன்று, ஒட்டகை மேய்ப்போரைக் கொலைசெய்து விட்டு, சதகாவின் ஒட்டகைகள் எல்லாவற்றையும் கொள்ளை யிட்டுக்கொண்டு சென்றார்கள். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இதையறிந்து, அவர்களைப் பிடித்து வரச்செய்து சிக்ஷித்தார்கள். ("புகாரீ" 8-வது பாகம் 163-வது பக்கம்).

அரேபியாவின் இயற்கையான இரக்கமின்மையானது, சிற்சில சந்தர்ப்பங்களில் அதிகொடூரமான உருவத்தோடு தோன்றிக் கொண்டிருந்தது. உதாரணமாக, யூத வகுப்பைச் சார்ந்த ஒருவன், சில நகைகளுக்காசைப்பட்டு ஒரு சிறுமியின் சிரசை இரண்டு கற்பாரைக்கிடையில் வைத்து நெறித்துவிட்டான். அச்சிறுமியை ஜனங்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சமுகத்துக்குக் கொண்டுவந்தனர். அச்சிறுமிக்கு ஓரளவு நிதானமிருந்ததாதலின், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், "உன்னைக் கொன்று விடுவதற்கு எத்தனித்தவர் யார்" என்று அச்

சிறுமியைக் கேட்டபோது, அச்சிறுமி தலையை யுயர்த்திச் சமிக்கை செய்தாள். ஆகவே, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அச்சிறுமியைக் கொன்றுவிட்ட யெத்தனித்தக் கொலை பாதகனை, அவ்வண்ணமே கற்பாறையில் நசுக்கும்படி உத்தரவளித்தார்கள். ("புகாரீ" 9-வது பாகம், 5-வது பக்கம்).

சில முஸ்லிம்கள் 'கைபர்' என்னுமிடத்துக்குச் சென்றார்கள். அவ்விடத்தில் முஸ்லிம்கள், தங்கள் தங்களின் அவசியத்தை முன்னிட்டுப் பற்பல பாகங்களில் தனித்தனியே பிரிந்துவிட்டார்கள். கொஞ்ச நேரத்துக்குப் பின்னர் திரும்பிவந்து பார்க்க ஒருவர் கொல்லப்பட்டிருந்தார். இவ்வரலாற்றை, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கட்டு அறிவிக்கப்பட்டது. கொலைபாதகரைத் தெரிந்து கொள்ளும்பொருட்டு, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சாக்ஷியம் தேடினார்கள். ஆனால், ஜனங்கள் ஒரு சாக்ஷியையேனும் முற்படுத்த முடியவில்லை. கடைசியாய் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கைபரின் யூதர்களிடம் சத்தியம் வாங்கக் கருதினார்கள். ஆனால், முஸ்லிம்கள் யூதர்களின் சத்தியத்தை ஏற்றுக்கொள்ள சம்மதிக்காததை முன்னிட்டு, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சதகாவின் ஒட்டகைகளை, கொல்லப்பட்டவருக்கு நஷ்டஈடாகக் கொடுத்தார்கள். ("புகாரீ" 9-வது பாகம், 9-வது பக்கம்).

அரேபியாவின் பலவகுப்பினர் சேர்ந்து ஒரு சந்தர்ப்பத்தில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடம் சைன்னிய வுதவி தேடினர். ஆகவே, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அவ்வகுப்பினருக் குதவியாக 70 - ஸஹாபாக்களை யனுப்பினார்கள். அவர்கள் "பேர்மவூனா" என்னும் இடத்துக்குச் சென்றவுடன், அவ்வரபிய வகுப்புக்கள் துரோகஞ்செய்து ஸஹாபாக்களைக் கொலைசெய்துவிட்டன. ("புகாரீ" 5-வது பாகம் 105-வது பக்கம்).

இத்தகைய குற்றங்களை, காபர்கள் மட்டும் புரிந்ததாய்க் கூறுவதற்கில்லை. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் கூட்டுறவு, சேர்க்கை, சகவாசம், ஆகியவைகளின் மூலமாய்ப் பழக்கப்பட்டு அவர்களின் ஆத்ம சக்தியால் பூரண நற்குணங்களை யடையா திருந்தகாலத்தில், முஸ்லிம்களிடையும் இத்தகைய் குற்றங்கள் சிற்சில சந்தர்ப்பங்களில் நிகழ்ந்துவிடுவதுண்டு. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் "ஹுதைபியா" வென்னும் இடத்தில் காபர்களோடு செய்துகொண்ட சமாதான

உடன்படிக்கையில், "மக்கமா நகரிலிருந்து, மதினமா நகருக்கு ஒளித்தோடிவரும் முஸ்லிம்களை மீண்டும் மக்கவாசிகளிடம் ஒப்புவித்துவிடவேண்டு" மென்ற ஒரு நிபந்தனையும் உண்டு. ஆகவே, மக்கமா நகரிலிருந்து மதினமா நகருக்கு ஒளித்தோடின "அபூபஸீர்" என்பவரை மக்கமாநகருக்கு அழைத்து வரும்படி குரைஷிகள், மதீனமா நகருக்கு இருவரை யனுப்பிவைத்தார்கள். அவர்களிடம் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், "அபூபஸீ"ரென்பவரை ஒப்புவித்து விட்டார்கள். ஆனால், வழியில் அபூபஸீர் அவ்விருவரில் ஒருவரைக் கொன்றுவிட்டு மதினாவுக்கு வந்துவிட்டார். மறுமுறையும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அபூபஸீரைக் குரைஷிகளிடம் ஒப்புவிக்கக் கருதியபோது, அபூபஸீர் கடற்கரைப் பக்கம் ஓடிவிட்டார். அவ்விடத்திலேயே ஸ்திரமாக விருந்தார். மக்கமா நகரில் இஸ்லாம் மதத்தைத் தழுவி மதினமா நகருக்குச் செல்லுவோர் மீண்டும் குரைஷிகளிடம் ஒப்புவிக்கப்பட்டு வந்தார்களாதலின், இஸ்லாம் மதத்தைத் தழுவுவோர் மக்கமா நகரிலேயே அதி கஷ்டத்தோடு தங்கியிருந்தார்கள். அவர்கள் அபூபஸீரின் வரலாற்றையறிந்து அவரோடு போய்ச் சேர வாரம்பித்தனர். இத்தகையோர், ஒரு ஸ்திரமான கூட்டமாக விருந்து வந்தனர். இவர்கள் குரைஷிகளின் வியாபாரக் கூட்டத்தைக் கொள்ளையிட்டுக் கொண்டிருந்தார்கள். ஆகவே, அபூபஸீர் முதலியோரின் இவ்வடாத செயல்களை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடம் குரைஷிகளறிவித்தார்கள். பின்னர் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அபூபஸீரையும், மற்றவர்களையும் மதினாவுக்கு வரவழைத்துக் கொண்டார்கள். (" அபூதாவூது " 2-வது வால்யம். 25-வது பக்கம்.)

இஸ்லாம், தூய்மையான ஆத்மசக்தியைக் கொண்டு அதி துரிதமாய் அரேபியாவில் பிரகாசத்தை யுண்டுபண்ணிக் கொண்டிருந்தது. மேலும், அரேபியாவின் பற்பல வகுப்புகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சந்நிதானத்தை யடைந்து " நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் கூட்டுறவு" என்னும் பாக்கியத்தையும், இஸ்லாமிய அறிவையும், பெறப்பிரியம் கொண்டிருந்தன. ஆனால், அத்தேசத்தின் அமைதியின்மையும், துர்க்கிருத்தியமும் இஸ்லாமிய ஆத்மார்த்தீக அலைகளைத் தம் சமுத்திரத்துக்குட் படுத்திக்கொண்டது. அரேபியாவின் அமைதியின்மையானது, அப்துல் கைஸின் பிரதிநிதிக்கூட்டம் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சந்நிதானத்தை யடைந்து, நற்

பாக்கியத்தைப் பெற முடியாமல் தடுத்துக்கொண்டிருந்தது. ஆதவின், விசனம் நிறைந்த வார்த்தைகளால் அவர் விளக்கிக்காட்டியதாவது:—“யாரசூலல்லாஹ்! கொடிய காபர்கள் எங்களுக்கும் தங்களுக்குமிடையே தடையாகவிருந்தனர். சதா அவர்களின் தடையை முன்னிட்டே நாங்கள் தங்களின் சமுகத்தையடைய முடியாமலிருக்கின்றோம். ஹஜ்ஜின் மாதங்களில் மட்டும் நாங்கள் தங்களின் சமுகத்தை யடையலாம். ஏனெனின், அம்மாதங்கள் சமாதான மாதங்களாக விருக்கின்றன. ஆகவே, தாங்கள் எங்களுக்கு இஸ்லாமிய கட்டளையைக் கற்பியுங்கள். நாங்கள் கற்றுக்கொள்வதோடு தங்களின் சமுகத்தையடைய முடியாமலிருப்போர்க்கும் இஸ்லாமிய சட்டங்களை யறிவிப்போம்.” என்பதே. (‘புகாரீ’ 2-வது பாகம்.)

இஸ்லாமானது தன் பிரசாரத்தை ஆயுதபலத்தால் ஆரம்பிக்கக் கருதவில்லை. ஆனால், ஆயுதபலமின்றி சத்யத்தை நிலைநிறுத்தக் கூடவில்லை.

“மதமென்பது எவரையும் கட்டாயப்படுத்தக் கூடியதல்ல. நேர்வழியும், வழிகேடும் ஒன்றையொன்று அணுகமுடியாமல் தனித்தனியே பிரிந்துவிடுகின்றன. (மேலும்) ஒவ்வொரு மானிடனும் இருளையும், பிரகாசத்தையும் தெரிந்துகொள்ளமுடியும்” (அல்குர்ஆனின் வியாக்யானம்.)

பூரண அடக்கத்தோடும், சாந்தமாயும் இஸ்லாமிய பிரசாரத்தை எச்சந்தர்ப்பத்திலும் புரியக்கூடிய உரிமை முஸ்லிம்களுக்குண்டு. மேலும், இவ்வூழியத்தைப் புரியும்பொருட்டு அமைதி, நியாயம் ஆகியவைகளை ஸ்திரப்படுத்தும் பொருட்டு அவைகளின் எதிரிகளைச் சார்ந்த ஷைதான்களையும், இடையூறுகளையும் அதி வீரத்தோடு எதிர்க்கவும் இஸ்லாமுக்குச் சுதந்திரமுண்டு. தன்னடக்கம், நட்பு ஆகியவைகளே தோற்றத்தில் நல்லொழுக்கத்தை அறிவுறுத்தக்கூடிய சத்தியப் பிரசாரத்திற்கு ஏற்றவையென உலகோர் கருதுகின்றனர். ஆனால், அவ்வமயம் நல்லொழுக்கத்திற்குரிய உபதேசத்தைப்புரிவதற்காக இஸ்லாம் முதன் முதலாய் வேறொரு காரியத்தைச் செய்யவேண்டியிருந்தது. இஸ்லாமிய ஆரம்பகாலமானது பூமியில் எவ்வாறு கட்டடத்தை கட்டவேண்டுமென்று யோசிக்கக் கூடியதாகவில்லை. ஆனால், பூமியை மேடு பள்ள மின்றி எவ்வாறு சமதரையாக்குவது? என்று யோசிக்கவேண்டியதாக விருந்தது. ஆகவே, இஸ்லாம், மக்கமா நகரின் ஒவ்வொரு மண்துண்டையும் நோக்கி 9 - வருடங்கள் வரை அவ்வினுவுக்கு விடையளிக்கும்படி அதிநளினமாய் கோரிற்று. ஆனால், அரேபியாவின் பாலைவனத்தைச் சார்ந்த ஒவ்வொரு வல்லு

வும் "எங்கள் சிரசுகள் உதையின் மூலமாகவே கணியும்" என்று விடையளித்து வந்தது. ஆனது பற்றியே, இஸ்லாம் உறையிலிருந்த வாளாயுதத்தை உருவிக்கரத்தில் தாங்கிப் பலத்தைப் பலத்தின் மூல மாகவே அடக்க வாரம்பித்தது. அரேபியாவின் யுத்தப்பிரிய இயற் கைக்குணத்தைப்போல், பழிக்குப்பழி வாங்குவதன் மூலமாய் வாளா யுதத்தை இரத்தத்தால் சாயமேற்ற வேண்டுமென்பது இஸ்லாமின் நோக்கமல்ல. ஆனால், உண்மை, ஸத்தியம் ஆகியவைகளைப் பிரசாரஞ் செய்ய வொட்டாமல் வழிமறித்துக் கொண்டிருந்த துர்க்கிருத்தியம், அமைதியின்மை ஆகிய இடையூறுகளை யகற்றி அரேபியாவைச் சம பூமியாகச் செய்வதே இஸ்லாமின் நோக்கமாயிருந்தது. சத்தியப்பிர சாரத்தைப் பின்னடைப்படுத்தி வந்த இடையூறுகளைச் சார்ந்த கஷ்ட நிஷ்டூரங்களால், ஸஹாபாக்கள் பெரும் தொந்தரையிற் சிக்குண்டு, பொறுமை, தன்னடக்கம் ஆகியவைகளைக் கைவிடக்கருதிய போதெல் லாம், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இஸ்லாமின் அதிமகத்துவமான லக்ஷியத்தின் உயர்வை எடுத்துக் காட்டி, ஸஹா பாக்களின் மனத்துள் உறுதியையும், நம்பிக்கையின் ஜீவனையும் அளித்து வந்தார்கள்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் துப்பட்டி யைத் தலைக்கு வைத்துக்கொண்டு 'கஃபா'வின் நிழலில் படுத்திருந் தபோழ்து, நாங்கள் ஸஹாபாக்கள்) எங்களுக்கு ஏற்படும் கஷ்டநிஷ்டூ ரங்களை முறையிட்டுக் கொண்டதோடு, இத்தகைய இடையூறுகளை நாங்கள் அநுபவிக்கும்படியாகவிருக்கும் நிலைமையில் தாங்கள் அல்லா ஹுத ஆலாவின் சமுகத்தில் உதவி தேடாமலிருப்பதேன்? எங்கட் காகத் தாங்கள் பிரார்த்திக்காமலிருப்பதேன்? என்று வினவியதிற்கு, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் "உங்கட்கு முன் சென்றுபோன சமூகங்களில் உறுதியுள்ள முஸ்லிம்களைக் குழிவெட்டி, அக்குழியில் நிறுத்திப் பின்னர் ரம்பத்தைக் கொண்டு வந்து அவர் களின் சிரஸில் வைத்து, அவர்கள் இரண்டு துண்டாகப் பிளக்கப்பட் டார்கள். ஆனால், இத்தகைய துன்பமும் அவர்களை மதத்தைவிட்டு மாற்றக்கூடவில்லை. அவர்களின் தொலியின்மீது இரும்பு சீப்புக்களால் சீவி எலும்புகளிலுள்ள சதைகளைப் பெயர்க்கப்பட்டது. ஆனால், அத் துன்பங்களை யநுபவித்துங்கூட அவர்களின் ஈமானில் சிறிதளவும் அதிர்ச்சியேற்படவில்லை. ஆகவே, நீங்கள் பொறுமையைக் கைக்கொள் ளவேண்டும். அல்லாஹுத ஆலாவின் பேரில் சத்தியமாக இஸ்லாம் என்னும் மார்க்கமானது பரிபூரணத்தையடையும். இஸ்லாமின் பரிபூர ணமானது, 'எமன்'னிலிருந்து 'ஹலரமௌத்'வரை ஒருவர் ஒட்டகையி

லேறிக்கொண்டு தனியே எத்தகைய இடையூறுமின்றிச் செல்லுவார். அல்லாஹுத்தஆலாவின் அச்சம், ஆடுகளைப் பிடித்துக்கொண்டு போகும் ஓநாயின் அச்சம், ஆகியவைகளைத் தவிர வேறு அச்சம் அவ்வழிப் போக்கரின் ஹிருதயத்தில் இருக்கமாட்டா. இதுவே, இஸ்லாமின் பூரண அமைதியாகும். ஆனால், அந்தோ! நீங்கள் இத்தகைய விசாலமான அரிய லக்ஷியத்தையடைய வேண்டிய முயற்சியில், மானிட பலஹீனத்தை யொட்டி அவசரப்படுகின்றீர்கள்'' என்று அறிவித்தார்கள். (''புகாரீ'' 4-வது பாகம்.)

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இஸ்லாமின் அவ்விலக்ஷியத்தை ''அத்தீபின் ஹாத்தம்'' ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு அதி தெளிவாய்ப் பதிய வைத்தார்கள். அதன் மூலமாய், இஸ்லாமின் நோக்கம் சந்தேகமற்ற முறையில் தெரிந்துகொள்ளக்கூடியதாக விருக்கின்றது.

அத்தீபின் ஹாத்தம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது:—''நான், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் திருச்சமுகத்தில் வீற்றிருந்தபோழ்து, ஒருவர் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சமுகத்தில் தன் தரித்திர நிலையை யொட்டி முறையிட்டுக்கொண்டார். பின்னர் மற்றொருவர் வந்து பொருள் கொள்ளையிடப்பட்டதையொட்டிச் சொல்லிக்கொண்டார். (இதன் பின்னர்) நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் என்னை நோக்கி, ''ஓ அத்தீ! நீங்கள் ஹீரா என்னும் நகரைப் பார்த்திருக்கின்றீர்களா.''? என்று வினவினார்கள். அதற்கு நான் ''நாயகமே! பார்க்கவில்லை. ஆனால், கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்று கூறினேன். பிறகு, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் (என்னைப் பார்த்து) ''ஒரு அந்தப்புர மாது தனியே ஹீராவிலிருந்துபுறப்பட்டு 'கஃபா'வைப் பிரதக்ஷிணஞ்செய்வதை நீங்கள் ஜீவித்திருந்தால் கண்ணுறுவீர்கள். ஆனால், அம்மாதின் ஹிருதயத்தில் அல்லாஹுத ஆலாவின் அச்சத்தைத் தவிர வேறு எத்தகைய அச்சமும் இருக்கமாட்டாது'' என்று கூறினார்கள். ''நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இவ்வாறு கூறியபோழ்து முழு அரேபியாவிலும் தீயை மூட்டிக்கொண்டிருக்கும் தை, என்னும் வகுப்பைச் சார்ந்த கொள்ளைக் கூட்டத்தாரின் நிலைமை என்னவாகும்,'' என்று நான் என் மனத்துள் கொண்டேன்'' என்று அத்தீபின் ஹாத்தம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவித்தார்கள். மீண்டும், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் (என்னைப்பார்த்து) ''நீங்கள் ஜீவித்திருந்தால், கிஸ்ராவி

னுடைய பொக்கிஷவாயல் திறக்கப்படுவதைக் கண்ணுறுவீர்கள் என்று அறிவிக்கவே, நான் ஆச்சரியமுற்று "ஹுர்மஸ்" உடையமகன் கிஸ்ராவின் பொக்கிஷமா" வென்று வினவினேன். அதற்கு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், "ஆம். ஹுர் மஸுடைய மகன் கிஸ்ராவின் பொக்கிஷத்தைப் பற்றியே கூறினேன்" என்று அருளிவிட்டு, மீண்டும் என்னை நோக்கி நீங்கள் ஜீவித்திருந்தால் ஒரு மனிதன் தானம் செய்வதற்காகத் தன்கையில் தங்கத்தை யெடுத்துக்கொண்டு போவானாயின், வழியில் அதை வாங்கிக்கொள்ள அருகரான எளியோரகப் படமாட்டார்கள். ஒவ்வொருவரும் தருமத்தைப் பெற்றுக்கொள்ளத்தகாத அளவு ஐசுவரியமுள்ளவர்களாக விருப்பார்களாதலின், அத்தங்கத்தை எவரும் பெற்றுக்கொள்ளமாட்டார்கள்" என்று அருளினார்கள்."

அத்தீபின் ஹாத்தம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அருளியதாவது:—"ஒரு அந்தப்புர ஸ்திரீ ஹீராவிலிருந்து புறப்பட்டு அச்சமற்றவளாய் கஃபாவைப் பிரதக்ஷணஞ்செய்துவிட்டுத் திரும்பிச் செல்லுவதை நான் என் கண்களால் கண்டுகொண்டேன். ஹுர் மஸுடைய மகன் கிஸ்ராவின் பொக்கிஷம் திறக்கப்பட்டது. அதைத் திறந்தவர்களுள் நான் சம்பந்தப்பட்டிருந்தேன். "தர்மத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய எளியவர் கிடைக்காமற் போகுமளவு, முஸ்லிம்களுக்கு அல்லாஹுத ஆலா ஐசுவரியத்தை யளிப்பான்" என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அறிவித்த 3-வது நற்செய்தியை அந்நாளில் ஜீவித்திருப்போர் கண்டுகளிப்பார்கள்."பின்னர், அம்மூன்றாவது நற்செய்தியில் கூறப்பட்டிருப்பதுபோல் நடைபெற்றதை எல்லோரும் கண்ணுற்றார்கள். பாலைவனத்தின் திறந்த வெளியிலுள்ள குடிசைகளில் நித்திரை செய்பவருக்கும், உலர்ந்த பேரீச்சங்காய்களைத் தின்பவருக்கும், ஒட்டகையை மேய்ப்பவருக்கும் இஸ்லாமானது இந்நற்செய்தியை யறிவித்தது. ஆயினும், அவர்கள் அந்நற்செய்திகளை நம்பியவாறே அவைகளின் நற்பயனைப் பெற்றார்கள். இந்நாகரீகக் காலத்தில் மாடமாளிகைகளிலிருப்பவர்களும், பட்டு மெத்தைகளில் நித்திரை செய்பவர்களும் இஸ்லாமின் வாக்குறுதியை நம்பாதிருக்கின்றனர். அந்தோ!

இஸ்லாமியப் போரின் லக்ஷியம் இதுவே. ஆதலின், இந்த லக்ஷியமானது கைகூடிய பின்னர் கஃபாவின் வாயல் முழு உலகத்துக்கும் பொதுவாய்த் திறந்து வைக்கப்பட்டது. உட்சண்டை, இரத்தஞ் சிந்தல் முதலிய துர்க்கிருத்தியங்கட்குப்பதிலாய் அரேபியாவில் சமாதானமும், அமைதியும் நிலவின. கலகம், குழப்பம், குபுர் ஆகிய

வைகளின் புழுதியகன்று ஸ்திரமான மானிட சுயேச்சையின் உயர்வு உலகில் தோன்றிய பின்னர், "இன்று நான் உங்கள் மார்க்கத்தைப் பரிபூரண மாக்கிவிட்டேன். என் தயைமுழுவதையும் உங்களுக் களித்தேன். பரிசுத்தமான இஸ்லாமை உங்கள் மார்க்கமெனக் குறிப்பிட்டிருக்கிறேன்," என்னும் அறிக்கையைப் பகிரங்கஞ்செய்யப் பட்டது. ஆகவே, "இஸ்லாம்," "அமைதி" ஆகிய இரண்டும் ஒரே உண்மையின் இருநாமங்களாகும். இஸ்லாமிய சமாதானமும், அமைதியை முன்னிட்டதேயாகும். அமைதிக்காகவே இஸ்லாம் போர்புரியும்.

இஸ்லாமும் சுயேச்சையும்.

(இமாமுல் ஹிந்து மௌலானா அபுல்கலாம் அவர்கள் எழுதியது.)

(376-வது பக்கத்தொடர்ச்சி.)

(6)

மேல்நாட்டின் இன்றைய ஜனநாயக தத்துவத்தின் அடிப்படையையும், அதன் ஒழுங்கு முறையையும் விளக்கிக் காட்டுவதற்காகவே, ப்ரான்ஸ் தேசத்தில் நடைபெற்ற புரக்ஷியையும், அந்நாடு சுயேச்சையடைந்த வரலாற்றையும் நாம் மேலே விரிவாக வரைந்துள்ளோம்.

இது ப்ரான்ஸ் தேசத்தில் நடைபெற்ற கிளர்ச்சியின் பயனாகத்தான் மானிட உரிமையைச் சார்ந்த சுயேச்சை, சமத்துவம் ஆகியவைகளை உலகம் அடைந்ததென்றும் பலர் கூறுவர். "மானிடருக்குச் சுயேச்சையுண்டா?" வென்னும் கேள்விக்கு, ப்ரான்ஸ் தேசம் வெளியிட்ட சுயேச்சையின் அறிக்கையை எடுத்துக் காட்டுவதே, முடிவான விடையாக விருக்கலாம்.

ப்ரான்ஸ் தேசம் வெளியிட்ட சுயேச்சையின் முதலாவது அறிக்கையில், உண்மையாகவே சுயேச்சையைச் சார்ந்த ஒரே அடிப்படை அதன் ஒவ்வொரு அங்கத்திலும் மறைந்திருக்கின்றது. இதை நாம் மேலே எடுத்துக் காட்டியிருக்கின்றோம். அவ்வறிக்கையின் எல்லா பாராக்களிலும் அடங்கியுள்ள சாரத்தை ஒரே வாக்கியமாய்க் கூற வேண்டுமாயின், "ஆதிக்கம், அதிகாரம் ஆகிய எல்லா உரிமைகளும் பொது மக்களைச் சார்ந்தன" என்பதேயாகும்.

ப்ரான்ஸ் தேசத்தின் ஜனநாயக தத்துவத்தைச்சார்ந்த எல்லா வகுப்புகளினுள்ளத்திலும், இத்தத்துவமே அடிப்படையாக இருந்து

வந்தது. புரக்ஷிக்காலத்திற்கு முன்னரும் ப்ரான்ஸில் பார்லிமெண்டரி ஆட்சியிருந்து வந்தது. ஆனால், அரசரின் உரிமைகளும், ஆதிக்கமும் 'சர்ச்சு' (church)களின் எல்லையற்ற எதேச்சாதிகாரமும் விசேஷபலம் பெற்றிருந்தன. ஆகவே, உண்மையில் ஒரு குறிப்பிட்ட மனிதனின் சிம்மாசனமே பொதுமக்களுக்குட்பட்ட அரசாங்கமென்னும் நாமம் பெற்று ஆட்சி புரிந்து வந்தது.

மேற் கூறப்பட்டுள்ள புரக்ஷிக்குப் பிறகு புரக்ஷிக்காரர்களுள் வேற்றுமை ஏற்பட்டது. ஒரு வகுப்பு ஆங்கில நாட்டு ஆட்சியைப் போன்ற ஆக்ஷியை ஸ்தாபிக்கக்கருதிற்று. இரண்டாவது வகுப்பு உண்மையான ஜனநாயக ஆட்சியை ஸ்தாபிக்கக் கங்கணம் கட்டியது. இவ்விரண்டாவது வகுப்பின் ஜனத்தொகை எண்ணிக்கையில் குறைந்திருந்ததாயினும் இதற்கு பொதுமக்களிடத்தும், விவசாயிகளிடத்தும் பெருஞ்செல்வாக்கிருந்து வந்தது. ஆகவே, இக்கூட்டம் கிராமவாசிகளைக் கிளப்பிவிட்டு 1792-வது ௵ ஆகஸ்டு௴ 10௳ "ப்ரான்ஸ் தேசம் அரசனைவிட்டு மீட்சிபெற்று விட்டது" என்னும் அறிக்கையை வெளியிடும்படி பார்லிமெண்டை கட்டாயப்படுத்திவிட்டது.

மேற்கூறிய லக்ஷியத்தை முன்னிட்டு ஒரு புதிய சபை தேர்ந்தெடுக்கப்பட்டது. தேரிந்தடுக்கப்பட்ட சபையானது ஒரு சப் கமிட்டியை ஏற்படுத்திற்று. இச்சப்கமிட்டியைச் சார்ந்தவர்களுள் பலர் பிரசித்திபெற்ற நூலாசிரியரும், புரக்ஷிக்காரருமான 'ஜான் ஜாக்ரோஸ்ஸோட்' (John-Jock-Roussode) என்பவரின் சிஷ்யர்களாக விருந்தனர்.

ஜான் ஜாக் ரோஸ்ஸோட் என்பவரே "அதிகாரம், ஆதிக்கம் ஆகியவைகள் சமுகத்திற் குரியனவென்னும், ஜன நாயக ஆட்சிக்கு அடிகோலியவராகும். இவர் இபற்றிய ஒழுங்கு முறையானது தேசீய ஆக்ஷியில் அரசனின் சம்பந்தத்தை யகற்றிற்று. இவர் இயற்றிய

[John Jock Roussode என்பவர் ப்ரான்ஸின் புரக்ஷியைத் தூண்டியவர்களிலொருவராகும். இவர் அரசாங்கசம்பந்தமான, தன் ஆராய்ச்சியை 1756-ம் வருடத்தில் புத்தகரூபமாய் அச்சிட்டு வெளியிட்டார். அப்புத்தகத்தில் மதம், தேசம் ஆகியவைகளைச் சார்ந்த எல்லா நடவடிக்கைகளும் அநியாயமான துர்க்கிருத்திய மென்று எடுத்துக் காட்டி ஜனநாயக ஆட்சியை ஸ்தாபிப்பதற்கு வேண்டிய உணர்ச்சியை ப்ரான்ஸ்காரர்களுக்குப் புகட்டியிருந்தார். மேலும், அப்புத்தகத்தில் ஜனநாயக ஆட்சிக் கவசியமான பற்பல சட்ட திட்டங்களையும் வரைந்திருந்தார். இது வெல்லாவற்றிற்கும் அடிப்படையாக தேசமக்களெல்லோரும் சமத்துவமானவர்களென்பதை நிச்சயித்திருந்தார். இவர் 1712-ல் ஜனனமாகி 1766-ல் மரணமடைந்தார். சங்கீதக் கல்வியை எழுத்து மூலமாய் வரையக்கண்டு பிடித்தவரிவரே.

சட்டதிட்டங்கள் "ப்ரான்ஸ் நாட்டுப் புரட்சியைச் சார்ந்த 1793-வது ஆண்டின் சட்டமென்னும்" நாமத்தால் பிரசித்திப் பெற்றிருக்கின்றன.

ஆனால், மறுவருடத்தில் இவ்வறிக்கையும் நிலைத்திருக்கக்கூட வில்லை. உண்மையில் மானிட உணர்ச்சிமேலிட்டு அடக்கமின்றி மனத்துள் தோன்றுவன வற்றையெல்லாம், இப்புரட்சிக்காலத்தில் கோரக்கூடிய ப்ரான்ஸியர் யோசித்துணரக் கூடுமாயினும் எதையும் செய்ய வியலா திருந்தனர். நீண்ட காலம் கைதியாக விருந்தோர் ஜெயிலைவிட்டு வெளிக்கிளம்பியதும், இன்னது தான் செய்ய வேண்டுமென்று தோன்றாமல் திகைத்து நிற்பதைப்போன்ற நிலைமையை பிரான்ஸ்தேயத்தார் கொண்டிருந்தனர். ஒருகாலம் முடிவடைந்து மற்றொரு காலம் ஆரம்பமாவதற்கிடையே யுள்ள பாகத்தை உலகம் சதா இத்தகைய நிலையிலேயே கழிக்கவேண்டிய தியல்பாக விருக்கின்றது.

இயற்கைச் சட்டத்திற் குட்பட்டே ப்ரான்ஸ் தேசமானது இந் நிலைக்குட்பட்டிருந்தது. சட்டதிட்டங்களை இயற்றுவது, அவைகளைப் பிரசுரிப்பது, மீண்டும்மீண்டும் ஜனங்கள் புதியகோரிக்கைகளைச் செய்வது முதலியவைகளில் பிரான்ஸியரின் காலஞ் சென்றுவந்தது. மேலும், அரசாங்கங்களை ஏற்படுத்துவதும், பிறகு அவைகள் குலைக்கப்படுவதுமாகவிருந்தன. 1795-வது ஆண்டில் வெளியிடப்பட்ட புதிய அறிக்கை 1799-வது ஆண்டுவரை நிலைத்திருந்தது. இதன்மத்தியிலேயே ப்ரான்ஸுக்கும், ஐரோப்பாவுக்குமிடையில் யுத்த மாரம்பமாயிற்று. ப்ரான்ஸ்தேசத்தின் அரசாங்க மாறுதலே இந்த யுத்தத்திற்குக் காரணமென்று கூறலாம். நாட்டிற்குள் குழப்பத்தை யுண்டுபண்ணிக் கொண்டிருந்த சக்திகள், இந்த யுத்தத்தில் கவனம் செலுத்தவேண்டியதாயிற்று. ஆகவே, பிரான்ஸ் தேசத்தில் மற்றொரு மாறுதலேற்பட்டு, பிரான்ஸ் தேசத்தை விட்டகன்றிருந்த ஏதேச்சாதிகார ஆட்சியை மீண்டும் அழைத்துக் கொள்ளப்பட்டது.

யுத்தகாலத்தில் ஆட்சிப் பொருப்பு சில (Director) டைரக்டர்களைக் கொண்ட ஒரு கூட்டத்தின் ஸ்வாதீனத்திலிருந்தது. மேலும், அரசாங்க சம்பந்தமான இலாக்காக்களையும் நிர்வகிப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பல கமிட்டிகளுமிருந்து வந்தன. அரசாங்கத்தை நீண்டகாலம் வரை தங்களின் ஸ்வாதீனத்தில் வைத்திருக்கமுடியாதென்பதை நன்கறிந்த டைரக்டர்களும், மேற் கூறப்பட்டகமிட்டிகளின் அங்கத்தினர்களும் யுத்த காலத்தை யொட்டிய அவகாசம் வியர்த்தமாகி விடாமல் பயனடையும் பொருட்டு, ஆட்சி முறையை

எவ்வாறேனும் மாற்றிவிட வேண்டுமெனக்கருதினார்கள். ஆகவே, 1799-ம் ஆண்டு நவம்பர் மாதம் 18-ந்தேதி மேற்கூறப் பட்டவர் களால் இரண்டாவது அறிக்கை வெளியாயிற்று. தேசத்தின் 500 பிரதிநிதிகளைக்கொண்ட சபையை, பிரசித்தி பெற்ற ஜயசீலரான நெப்போலியன் போனபார்ட்டின் ஆதரவால் சைன்யபலத்தைக் கொண்டு கலைத்து விடப்பட்டது. ஏதேச்சாதிகாரம் தோல்வி யுற்ற பின்னரும், ஏதேச்சாதிகார முறையானது தலைதூக்கி ஆங்கில நாட்டைப் போலவேபிரான்ஸும் ஜனநாயகத்வத்தை யொழித்துவிட்டது.

ஆகவே, தேசத்திற்கு வேண்டிய ஆட்சி முறையையும், சட்ட திட்டங்களையும் இயற்றுவதற்காக ஒருபுதிய சபையை ஏற்படுத்தப் பட்டது. இப்புரட்சியின் 8-வது ஆண்டில் ஒரு அறிக்கை வெளியா யிற்று. உண்மையில் இவ்வறிக்கையானது பிரான்ஸியரை, ஏமாற்று வதற்காக நெப்போலியன் போனபார்ட்டு தயாரித்தவிளையாட்டுப் பொருளேயாகும்.

இவ்வறிக்கை, தோற்றத்தில் மட்டும் குடியரசை ஸ்தாபிக்கக் கூடியதாக விருந்தது. மேலும், இவ்வறிக்கையில் குடியரசுக்கு வேண்டிய எல்லா அங்கங்களையும் சேர்க்கப்பட்டிருந்தன. ஆனால் ‘குடியரசு சபை’யின் சார்பாக பிரான்ஸ் தேசத்தை ஆட்சி புரிவதற்கு ஒரு உத்யோகஸ்தரை நியமிக்கப்படும். இவ்வுத்யோகஸ்தர் 20-வருடம் வரை ஆட்சி புரியவேண்டும். நிர்வாகப்பதவிகளை யளிப்பது, சைன்யங்கள் சம்பந்தமான அதிகாரம், யுத்தந்தை நடத்தி வைப்பது முதலிய சகல அதிகாரங்களும் இப்பெரும் உத்யோகஸ்தரையே சார்ந்திருக்கும். இப்பெரும் உத்யோகஸ்தருக்கு இரண்டு உதவியாளர்களும் வைக்கப்பட்டிருந்தனர். ஆனால், உண்மையில், இத்தலைவரே தம்மிஷ்டம் போல் ஆட்சி புரியும் சர்வாதிகார முள்ள சக்கரவர்த்தியாகும். நெப்போலியன் போனபார்ட் இத்தகைய ஜனநாயக ஆட்சியின் சக்கரவர்த்தியாகவமர்ந்தார்.

பிரான்ஸ் தேசத்தில் நிகழ்ந்த காரியங்கள் ஆச்சரியத்தை மூட்டக் கூடியனவாக விருப்பினும் சுயேச்சையைக் கோரி ஏற்பட்ட ஆரம்ப கிளர்ச்சியானது, தன் காரியத்தை முடித்துக் கொண்டதென்றே கூற வேண்டும். மேற்கூறிய சம்பவத்துக்குப் பின்னர், பிரான்ஸ் தேசத்தில் ஒழுங்கு முறையற்ற ஓர் ஏதேச்சாதிகார காலம் தோன்றிற்று. பின்னர், ஆங்கில நாட்டு சட்டவரம்பிற்குட்பட்ட ஒரு குடியரசு நியமனமாயிற்று. ஆயினும், கடைசியாய் ஜனநாயகத்வ உண்மைக்கே ஜெயம் ஏற்பட்டு “ஆளும் உரிமை தேசமக்களையே சார்ந்தது.” என்னும் அடிப்படையைத் தாங்கிய ஆட்சி நாட்டில் நிலவிற்று.

ப்ரான்ஸ் தேசத்தைத் தவிர ஐரோப்பாவின் மற்ற பாகங்களில் இவ்வரசாங்க மாறுதலைச் சார்ந்த உணர்ச்சியானது வியாபகமடைய வில்லை. ஆனால், உண்மையில் குடியரசு கொள்கைக்குட்பட்ட அரசாங்கத்தை ஸ்தாபிக்கக் கருதியோர்க்கு, ப்ரான்ஸ் தேசத்தின் கிளர்ச்சியானது நன்மை புரியாதிருக்கவில்லை.

(தொடரும்)

உலமாக்களின் கடமையும், கோளத்தனமும்.

(அல்லாமாஹ் ஸைய்யத் ஜமாலுத்தீன் ஆப்கானி அவர்கள் எழுதியது.)

அல்லாஹுதஆலா உலகில் மக்கட்களுக்கு கல்வி, அறிவு, ஞானம் ஆகியவைகளை யளித்து, அவைகளின் பிரகாசத்தைக் கொண்டு அவர்களின் ஹிருதயங்களை யலங்கிர்தமாக்கி யிருக்கின்றான். அல்லாஹுதஆலா இப்பாரிய உலகில் மானிடர்களுக்கு மட்டும் பகுத்தறிவையும், ஆத்மாவினால் அடையக்கூடிய அநேக சக்திகளையும் அளித்து, ஒவ்வொரு புதிய காரியங்களையும், ஒவ்வொரு தொழிலின் செய்கையையும் ஒன்றோடொன்றாக இணைத்திருக்கின்றானென்பதை யுலகின் ஒவ்வோர் அணுவும் பெரிய அத்தாட்சியாக விருக்கின்றன. ஆகவே, மனிதர்கள் ஆச்சரியம், பிரமிக்கத் தக்கது போன்ற காரியங்களை செய்யக்கூடியவர்களாகி விடுகின்றனர். அதை நோட்டமிட்ட சிலரின் அறிவும், யோசனையும் வீழ்ச்சி யடைகின்றன. குறுகிய ஞானமுள்ளவர்கள் அக்காரியங்கள் முஅஜ்ஜிஸா வென்றும், நட்சத்திரங்களுடைய ராசியென்றும், ஆத்ம சக்தியென்றும் பலவாறு சொல்லுகிறார்கள். இன்னும் சிலர் புத்தியும், யோசனையு மற்றவர்களாய் மானிட சக்தி இதை யோசிக்கவும், உண்மையைக் கண்டுபிடிக்க பல மற்றதென சொல்லுகிறார்கள். அல்லாஹுதஆலா மானிடர்களுக்கு உலகம் பிரமிக்கக் கூடிய காரியங்களைச் செய்யத் தகுந்த சக்தியைக் கொடுத்திருப்பதுடன், மார்க்கத்தையும் ஏற்படுத்தி யதன் செல்வாக்கினால் நல்லது, கெட்டது, கேள்வி, கணக்கு நன்மை, தின்மை ஆகியவைகளுக்கு, தகுதி யுடைவனாக்கி யிருக்கிறான்.

ஒருவன் உண்மையான நோக்கத்துடன் ஆராய்ந்தறிவானாகில், உலகின் எப்பாகத்தவர்களுடைய சக்திகளும் சமமாய் இருக்கிறதென்பதைத் தெரிந்துகொள்ளுவான். பூர்த்தியான சீர்திருத்த மடையக் கூடிய சக்தியை ஒவ்வொரு மனிதனுக்கும் அல்லாஹுதஆலா

அளித்து, அதைக்கொண்டு ஹிர்தயங்களின் மூலமாய்வருவதையான நற்கருமங்கள் உண்டாகும்படி சிருஷ்டித்திருக்கிறான். ஆகவே, சிற்சில விடங்களில் சொற்ப வித்தியாசம் தோன்றில் அதை நுட்பமானப் பார்வையைக் கொண்டு நோட்டமிட்டா லன்றி, மற்றவைகளினால் நோட்டமிட முடியா.

ஒவ்வொரு மனிதனுடைய ஹிருதயத்திலும் மேன்மையான உயரிய உச்சஸ்தானத்தை யடையவேண்டு மென்னும் எண்ணம், ஒவ்வொரு நிமிஷமும் உண்டாகிக் கொண்டிருக்கிறது. அவன் தன் சமூகத்தில் விசேஷ கண்ணியத்திற்கு அதிபனாகி, யாவரிடத்திலும் மேன்மை யடைவதற்கு மனோ வெழுச்சி யுண்டாகிக் கொண்டிருக்கிறது. உண்மையான மனோ திடத்துடனும், முயற்சியுடனும், தொடுத்தக் கருமத்தை சாதிப்பவர்களுக்கு, அவர்களுடைய தேட்டங்கள் பாழடையாமலும், முயற்சி வீண்போகாமலும், மனோ திடம் குன்றி தொடுத்தக் காரியத்தைச் செய்து முடிப்பதை விட்டும் விலகாதிருக்கும்படி, ஹக் சுபஹானஹு வத ஆலாவின் கிருபா கடாக்ஷமென்னும் கருணையாகிறது செய்து கொண்டுவருகிறது. இப்படிப் பட்ட சக்திகள் தன்னிலடங்கி யிருக்க, மானிடர்களில் பெரும்பாலானவர்கள் பழிப்பு, கேவலம், அடிமை வாழ்கை ஆகியவைகளுக்கு ஆளாகுவானேன்? அவர்கள் தங்கள் பிறப்பினுரிமையை எந்த திட்டிற்கு அடையவேண்டுமோ? அதையடைய கொஞ்சமும் சக்தியற்றவர்களாய் இருக்கின்றனர்.

இப்படிக் கொற்ற கெடுதிகள், அல்லாஹு த ஆலாவின் நிர் நீதத்தின் பேரிலும், அவனுடைய வாக்கின் பேரிலும் நம்பிக்கை வைத்து, தங்களுடைய நற்கருமங்களுக்கு நற்கூலியை ஆதரவு வைத்தும், பாவச் செய்கைக்கு தண்டனையாக நரக வேதனையை யடைய வேண்டுமென்பதை பயந்தும், எந்நாளையில் ஒவ்வொருவனும் தன்னுடைய நன்மை தின்மையின் அணுப்பிரமானவைகளையும் கண்டுக்கொள்ளுவானோ? அந்நாளின் பேரிலும் ஈமான் கொண்டிருக்கும் படியானவர்களை மிகுதம் சூழ்ந்திருக்கின்றது. மேற்கூறிய துர்க்கிருத்தியங்களை விட்டு விடுதலையடைய மானிடர்கள் முற்படுவார்களாயின், எல்லாக் கெடுதிகளுக்கும், மனோ வியாதிகளுக்கும் "கோளத்தனமே" வித்தாகயிருப்ப தென்பதை வெள்ளிடை மலையைப்போல் தெரிந்து கொள்ளுவார் களென்பது திண்ணம்.

கோளத்தன மென்பதென்ன ? அது ஒரு பெரிய (லஅனத்) முனிவு. அக்கோளத்தனமே அநேக தேசத்தின் எழுச்சியை வேருடன் பறித்தெரிந்துவிட்டது. ஒவ்வொரு ஜாதியார்களுடைய சக்தி

களை மண்ணாக்கிவிட்டது. பெரிய பெரிய சக்திவாய்ந்த இராஜாக்களை சிம்மாசன மேடையை இழக்கச்செய்து கேவலமடையும்படி செய்தன. பெரும் கண்ணியவான்களுடைய ஹிர்தயங்களைப் பலஹீனமாக்கி, யவர்களுடைய சிரசைத்துண்டித்து மண்ணில் புதைத்து விட்டன. தேடுபவர்களுக்கு நல்வின் வாயலையடைத்து, நேர்வழியின் புலனை ஞானிகளின் பார்வையில் நின்றும் மறைத்து கொள்ளுகின்றது. பழிப்பு, இழிவு, அடிமைவாழ்க்கை ஆகியவைகளின் கெடுதிகளை மனிதர்களுக்கு இலேசாக்கிக் காட்டியவர்களை நாசமாக்கி விடுகின்றது.

கோளத்தனத்தின் முக்கிய குணமாகிறது :—சுயேச்சையாய்ப் பிறந்த மனிதனை அடிமைவாழ்க்கையின் விலங்கை, தானாகவே தன் கழுத்தில் போட்டுக்கொள்ளும்படியாய் தயாரித்து, அதனால் அடையும் இழிவு, கஷ்ட நஷ்டங்கள் போன்றவைகளை யேற்று மனச் சலிப்புடனிருக்கச் செய்துவிடுகின்றது. இதனாலுண்டாகும் பழியான கெடுதிகளை வீரனுடைய மூளைவரையில் எற்றும்படிச் செய்வதில்லை. கோளத்தனத்தினால் மனிதனடையும் இழிவு, பழிப்பு போன்றவைகள், பரிசுத்தம், உயரிய முயற்சி ஆகியவைகளின் சக்தியுடைய ஆத்மாவிற்கு, மரணத்தைப் பார்க்கினும் மிக்கக் கொடியது. ஆகவே, மனிதன் இழிவு, கஷ்டம், கண்ணியமற்ற ஜீவனம் முதலியவைகளை தனக்கு இலேசானதும், உயரிய வாழ்க்கையென்றும் எண்ணிக் கொள்ளுகின்றான்.

கேவலம்! எவன் இழிவையே தனக்கு செல்வமாகவும், பழிப்பான ஜீவனமே தனக்கு நன்கொடையானதென்றும் எண்ணிக் கொள்ளுகிறானோ? அதனால், அவனிலுள்ள வீரத்தனத்தின் ஆத்மாப்பறிக்கப்பட்டு சவமாய்விடுகிறான். வீரத்தனமற்று சவம் போன்றவனுக்கு எத்துணை காயம்பட்டாலென்ன! எவ்வளவு கஷ்டமடைந்தாலென்ன!! எவ்வள்வு உபதேசம் செய்தாலென்ன!!! அவைகள் அவனுக்கு பிரயோஜனமற்றவைகளாகி, அவன் வெளித்தோற்றத்தில் சவமாக யில்லாதிருந்தாலும் ஐயறிவற்றவனாக ஜீவித்திருப்பதன்றியும், ஒவ்வொரு நிமிஷமும் மரணத்தின் பாஷாணத்தைப்பருகிக் கொண்டிருக்கின்றான். அவன் விலாவில் ஹிர்தயமென்ற ஒரு வஸ்து உண்டாயிருந்தாலும், அதுவெறும் மாமிசத்துண்டாக விருப்பதனால், சதா இழிய வாழ்க்கையிலிருந்து கஷ்டமடைவதன்றி, உச்சஸ்தானத்தையடைய சக்தியற்றிருக்கின்றான். ஆகவே, அவனுக்கு ஒவ்வொரு பழிப்பும் மகிழ்ச்சியாகவும், இக் கேவலமான ஜீவனத்தால் அவனடைய வேண்டிய உயரிய ஸ்தி

னத்தை யிழந்து, தானுடியதை யடைந்துவிட்டதாகவும், மறுமையில் நற்பேறு கிட்டிவிடுமென்றும் எண்ணிக்கொள்ளுகிருன்.

கோளத்தனமென்ருல் என்ன? தன்னை நோக்கிவரும் ஒவ்வொரு கெடுதியையும் எதிர்க்க சக்தியற்று சோர்வடையச் செய்யும் மனத்திடக்குறைவிற்கே சொல்லப்படும். மனேசக்தியை ஆதி சிருஷ்டிக் கர்த்தாவாகிய அல்லாஹுதஆலா ஜீவிப்பிற்கு ஒரு பகுதியாகப் படைத்திருக்கின்ருன். ஆத்ம சக்தியைக் கெடுத்து, அல்லாஹுதஆலா தனது குர்ஆன் ஷரீபில் திருவுளம் செய்திருப்பதற்கு முற்றும் மாற்றமாக, மௌத் (மரணத்)தை மிகுதம் பயப்படும்படிச் செய்வதே கோளத்தனத்தின் முதற்குணம். உலகின் கண்ணுண்டா யிருக்கும் ஒவ்வொரு அணுவும் மௌத்தென்னும்—மரணத்தை யனுபவித்தே தீரவேண்டும். அல்லாஹுதஆலாவைத் தவிரவுள்ள மற்றவைகள் மரணத்தை எப்போழ்து, எங்கே எந்தவிதத்தில் அனுபவிக்க வேண்டுமென்பதை யெவனும் அறிந்துகொள்ள முடியாது. (நீங்கள் எப்படிப்பட்ட விடத்திலிருந்தாலுஞ் சரியே, காற்று புகுதாவண்ணம் கட்டப்பட்டக் கற்கோட்டையி லிருந்தாலுஞ் சரியே உங்களை மௌத்து—மரணம் பெற்றுக்கொள்ளும். அல்குர்ஆன்.) சிலர் அல்லாஹுதஆலாவால் அளிக்கப்பட்ட சக்திகளை யுபயோகிப்பதனுல் கிடைக்கக்கூடிய இருலோகத்தின் நற்பேற்றையிழந்து, கியாமத்து நாளில்கிருபா கடாக்ஷமுள்ள நாயனின் திருசமுகம் மீண்டும் செல்வோமென்பதை மறந்து, மேலான ரக்ஷகன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளுவதற்காகக் கொடுத்திருக்கும் வீரம், மனேதிடம் ஆகியவைகளை யிழந்து தன்னையே மறந்திருப்பதன் காரணமாகவே, மௌத்து—மரணம் அவர்களையழித்து நாசம் பண்ணக்கூடிய சண்டமாருதமென்னும், வியாதியென்பதைத் தெரிந்து கொள்ளவில்லை. சில அறிவிலிகள் ஒவ்வொரு அடியெடுத்துவைக்கும் போழ்தும், எங்கே மௌத்தாகி விடுவோமோ என்ற திடுக்கமுடையவர்களாகவே இருக்கின்றனர். இப்படிப் பட்டவர்கள் அல்லாஹுதஆலா மனிதர்களுக்கு அளித்திருக்கும் சக்தியை ஒரு நிமிடநேரம் நோட்டமிட்டு ஆராய்வார்களாகில், எத்தனையோ பெரியோர்கள் தங்களுடைய கடமையைச் செய்யவொட்டாது தடுத்து, அவர்களுக்கு விதிக்கப்பட்ட பெரிய பெரிய தண்டனைகளையும் கண்டு, மனேதிடம் குன்றி போகாமல், தங்கள் காரியத்தில் சித்தி பெற்ருர்கள் என்பதையும், ஆண்டவனுடைய நற்பாதையையடைத்து, உலகின்நற்பதவிகளை ஹராமாக்கி வைப்பது சைத்தானின் வஸ்வாஸ் (மனவூசாட்ட) மென்றும், வெள்ளிடை மலைப்போல் பகிரங்கமாய்த்தெரிந்து கொள்ளுவான்.

கோளத்தனமானது கஷ்டங்கள் சூழ்ந்த காலத்தில் மனிதனை தூக்கு மரத்திற்கு இழுத்துச் செல்லக்கூடியது. ஆதிசிருஷ்டிகர்த்தா வின் அடியார்களைச் சூரையாடுகிற சைத்தானின் வேட்டை வலையாக விருக்கிறது. வழக்கமாய் அடைந்துவரும் இழிவு, பழிப்பு, கஷ்டம் முதலியவைகளுக்கு கோளத்தனமே தாதுவாகும். பரிதாரு கேவலம், மிடிமை, குப்ரு போன்றவைகள் கோளத்தனத்தை விட்டும் நீங்கியதல்ல. ஒரு கூட்டத்தார்களின் ஆண்மை மண்ணில் புதைக்கப் படுவது, இரத்தக் கலப்பு அறுபட்டு யுத்தவீரர்கள் தோல்வியடைவது, உயரிய ஸ்தானத்தில் பறந்து கொண்டிருக்கும் விருதுதலைச்சாய்வது, பாத்துஷா, சுல்தான், அமீர் போன்றவர்கள் தங்கள் உன்னதபதவியை யிழந்து பழிக்கப்பட்டவர்களாய், காரிய சித்தியடையாப் படுகுழியில் வீழ்த்தப்படுவது, ஒரு ஜாதியார்களை யுத்தத்தில் சதிமோசத்திலாக்குவது ஆகியவைகள் கோளத்தனத்தாலல்லவா? சுயநலக்காரர்களைக் கைலஞ்சம் வாங்கும்படித் தூண்டுவதும் கோளத்தனமல்லவா? ஏழ்மை, மிடிமை, அடிமைவாழ்க்கை ஆகியவைகளைப் பற்றி சற்றுபுலனைச் செலுத்தியாராய்ந்து பார்க்கில் அது மௌத்துடைய பயத்தாலுண்டாகிற தென்றும், அதுவே கோளத்தனத்துடைய வியாதியென்றும் நன்றாய் விளங்கும். ஆகவே, கோளத்தனம், குபாட்டம் மனிதர்களுக்கிடையில் எல்லாவித சம்பந்தங்களினால் ஏற்படும், மனத்தாங்கல் ஆகியவைகளை நீக்கிவிடுங்கள். முக்கியமாய் அல்லாஹுத ஆலாவையும், அவனுடைய ரசூல் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பேரிலும், கியாமத்துநாளின் பேரிலும் ஈமான் கொண்டு, நற்கருமத்திற்காக சுவனப்பதவியை அபேட்சிக்கிறவர்கள் பேரில் கோளத்தனத்தையும், மேற்கூறிய தூர்க்கிருத்தியங்களையும் விட்டுவிலகுவது முக்கிய கடமையாகும்.

தீனுல் இஸ்லாத்தின் உஸூல் (அடிப்படை) பேரில் கவனம் வைத்து, அல்லாஹுத ஆலாவுடைய வஹ்தானிய்யத்தை பூரணமைப் படுத்தி, அவனுடைய அன்பையடைய வேண்டியது கடமையாகும். ஆகவே, ஒவ்வொரு முஸ்லிமானவனும் தீனுடைய அடிப்படை பேரில் கவனம் வைத்து, அல்லாஹுத ஆலாவின் அன்பைப் பெற்றுக் கொள்ளுவதைத் தடுக்கக் கூடியது, நேரான பாதையில் செல்லாமல் வழிக்கேட்டில் செல்லும்படி செய்யும் பழிப்பு, முனிவு ஆகியவைகளை விட்டும் நூறுகாதவழிக்கப்பால் விரைந்தோட வேண்டும். பரிசுத்த குர்ஆன் ஷரீபை யோதி அதன் பொருளை யுணர்ந்தவர்கள் "மௌத்தை நேசிப்பதை அல்லாஹுதஆலா ஈமானின் ஒரு அம்சமாக்கியிருக்கிறானென்" பதை நன்கறிவார்கள். உண்மை மூமினல்

லாதவர்களைப் பரீக்ஷிப்பதற்காக அல்லாஹுதஆலா தனது குர்ஆன் ஷரீபில் திருவுளம் செய்திருப்பதாவது.

எப்பொழுது (தீனுக்கு இடையூரை யுண்டு பண்ணும் எதிரிகளை யெதிர்த்து) தடுக்கும்படி பரலாக்கப் பட்டதும், ஒரு கூட்டத்தார்கள் (தங்களைப் போன்ற) மனிதர்களுக்கு அல்லாஹுதஆலாவுக்கு பயப் படுவதைப் பார்க்கிலும் அதிகமாய் பயந்தார்கள். (அல்குர் ஆன்) (இன்னும், "எங்களுடைய நாயனே! நீ எங்கள் பேரில் ஏன் தீனுக்கு கெடுதியைச் செய்பவர்களுடன் எதிர்த்து தடுப்பதை பரலாக் (கட மையாக்)கினாய்? ஆஹ்! கைசேதமே!! எங்களை இன்னும் சொற்ப காலம் ஜீவித்திருக்க வசதியளிக்கக் கூடாதா? வென்றும் சொன் னார்கள்.

உண்மை மூமினானவன் அல்லாஹுதஆலாவின் பாதையில் தன் பாதங்களை ஸ்திரப்படுத்தி, அவனுடைய திருநாமத்தின் சங் கையை நிலைநாட்டி, அவனுடைய உத்திரவை நடத்தி வைப்பதற்கு உயிர், பொருள், மற்றெல்லா வஸ்த்துக்களையும் குர்பாணி (தத்தம்) செய்வதே தனக்கு கண்ணியமானதென்று நினைக்கின்றான். பரிசுத்த குர்ஆன் ஷரீப் தொழுகை, ஜகாத், போன்றவைகளை மட்டும் ஏவ வில்லை. ஏனெனின் தொழுகை, ஜகாத் ஆகியவைகளை மூமின், முனா பிக், காபிர் போன்றவர்களும் நடத்தி வைக்கலாம். ஆனால், அல்லா ஹுதஆலாவுடைய ஹுக்கும்களை நடத்திவைப் பதற்காகவும், அவ னுடைய உண்மைசான கலிமா (மூல மந்திரம்) வையுலகில் பரவச் செய்வதற்காகவும், அவனுடைய நிர் நீதத்தை புலகிற்கு அறிவிப் பதற்காகவும் ஆத்மதியாகம் செய்வதே பூர்ணமான ஈமானுடையவ னென்பதற்கு சான்றாகும். ஆத்மதியாக யின்மையால் ஈமானில் ஏற்படும் குறைவை, வேறு கருமங்களினால் பூர்த்தி செய்துக் கொள்ள முடியாதென்பதை பகிரங்கமாய் விளக்கிக் காட்டுகின்றது.

ஜீவித்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு முஸ்லிமானவனும் வீர னாகவும், ஸ்திரமான திடமுடையவனாகவும், உண்மையான ஹிர்தயத் தோடு குர்ஆனில் அருளப்பட்ட "இஸ்லாத்தின் சட்டதிட்டங்களை நடத்திவைக்க வேண்டியவனாக விருக்கும் ஸ்திதியில், அவனில் இஸ் லாமும், கோளத்தனமும் சேர்ந்திருப்பது. எவ்விதம்?

மூமினானவன் தனக்காக இருகருமங்களை நாடுகிறான் (1) உல கில் தான் கண்ணியமான யில்லர வாழ்க்கையை நடத்தவும், (2) இறந் தால் ஷஹீதா (அல்லாஹுதஆலாவிற்காக உயிர்துறந்தவனா)க மௌத்தாகி, அல்லாஹுதஆலாவின் பரிசுத்த சந்நிதானத்தை யடைந்து, தன் ஆத்மா உச்சஸ்தானத்தை பெற்று, முகர்ரபான

மலக்குகளுடன் வீற்றிருக்கவும், கண்யமான சிறப்பைப் பெற்றுக் கொள்ளவும் விரும்புகின்றான். ஆகவே, மௌத்து அல்லாஹுத ஆலாவின் அதிகாரத்திற் குட்பட்டிருக்கிறது. அவன் நாடும் போழ்து மௌத்தாக்கி விடுவான் என்றும், தன் பேரில் கடமையாக விதிக்கப்பட்ட பரலுகளை நடத்தி வைப்பதில் ஒரு மூச்சையும், தன் ஜீவியத்தில் வீரமற்றதாக ஒரு சுவாசத்தையும் போக்கி வைக்கக் கூடாதென்பதை நன்கறிந்து கொள்ளுபவனே ஹகீகத்தில் மூமினானவனாகும்.

நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கொண்டு வந்த பரிசுத்த இஸ்லாம் மார்க்கமும், கோளத்தனமும் ஒருவிடத்தில் சேர்ந்திருக்க முடியாது. குர்ஆன் ஷரீபின் ஒவ்வொரு ஆயத்துகளும் கோளத்தன முடையவன், தான் ஈமான்தாரியென்று சொல்லுவது தப்பு என அறிவிக்கிறது. ஆகவே, எவன் கோளத்தனத்திற்கு இரையாகி விட்டானோ அவனுடைய ஹிர்தயம் அவனை யேமாற்றிவிட்டது. அவனுடைய அறிவு அவனை சூழ்ச்சிக்குள்ளாக்கி, பரிகசிக்கின்றது. அவனுடைய் ஹிர்தயத்தில் ஆர்பளவு ஈமான்கூட யுண்டாயிருக்கவில்லை என்பதையவன் அறிந்துகொள்ளவேண்டும்.

அன்பியாக்களுடைய அனந்தரக்காரர்களான், சங்கைவான்களாகிய உலமாக்கள், ஜனங்களுக்கு உண்மையான பாதையை அறிவிக்கிறது, அல்லாஹுத ஆலாவிற்கு வழிப்படும்படி ஜனங்களுக்கு உண்மையான பாதையை அறிவிக்கிறது, அல்லாஹுத ஆலாவிற்கு வழிபடும்படி ஜனங்களுக்கிடையில் பிரசாரம் செய்வது ஆகியவைகளில் எப்படிப்பட்ட கஷ்ட நஷ்டங்கள் நேரிடினும், உண்மையைப் பிரசாரம் செய்வதில் முன்வைத்தப் பாதத்தைப் பின்வாங்காமல், அல்லாஹுத ஆலா தங்கள் பேரில் கடமையாக்கிய பரலை நிறைவேற்றுவதில் கொஞ்சமும் பின்னடையக் கூடாது.

சங்கை பொருந்திய உலமாக்கள் நன்மையையேவி, கெடுதியையகற்ற வேண்டிய, தங்கள் கடமையைச் செய்ய இன்று முற்பட்டு, ஜனங்களுக்கு குர்ஆன் ஷரீப் ஆயத்துகளின் பொருள்களை அறிவுறுத்தி, முஸ்லிமானவர்களுடைய ஈமானைப் புதிப்பித்து விடுவார்களாயின், சொற்பநாட் களுக்குள் முஸ்லிம்கள் உன்னதஸ்தானத்தையடைந்து விடுவார்கள். அவர்களின் மேன்மையை உலகின் நாலுபக்கத்து படிப்பாளிகள் முதற்பொது ஜனங்கள் வரையில் புகழ்ந்து பேசுவார்கள். முஸ்லிம்கள் இழந்த பூர்வமேன்மையைத் திரும்பவு மடையக் கூடிய நாள் நெருங்கி விடு மென்பதையும், அவர்களுடைய மனமே சாட்சிப் பகரும்,

முஸ்லிமானவர்கள் தங்களுடைய பெரியோர்களிடத்திலிருந்து அனந்தரமாய் பெற்ற மாணிக்கம்போன்ற பொருள், அவர்களின் ஹிர்தயத்தில் பதிந்திருக்கின்றது. ஆகவே, அதை பிரகாசிக்கச் செய்ய வேண்டியது மட்டும் பாக்கியாக விருக்கின்றது. அப்படிச் செய்யப்படுமாயின் இன்ஷா அல்லாஹ் முஸ்லிம்கள் அடிமை வாழ்க்கையின் துயில் நீங்கி, தாங்கள் முன் இழந்துவிட்ட உன்னதஸ்தானங்களையும், தற்போழ்து இழந்துகொண்டிருக்கும் கண்ணியத்தையும் திரும்ப அடைவதுடன், அல்லாஹு தஆலா விடத்தில் மகாமெ மஹ்மூதாவென்ற உன்னதஸ்தானத்தையும் பெற்றுக் கொள்ளுவார்கள்.

மஞ்சகுப்பம் படேசாவின் வருணவண.

உண்மையான அவுலியாக்கள் பாபம் செய்வார்களா?

(உண்மையான அவுலியாக்கள் பஞ்சாவைக்கவாவது, அதைக் கழுவிக் குடிக்கவாவது மாட்டார்கள். பஞ்சா எடுப்பது, அதைக் கழுவிக் குடிப்பது முதலியவைகள் இஸ்லாம் மார்க்கத்தில் ஹராமும், ஷிர்க்குமாகும். படேசா பஞ்சா எடுத்தும், அதைக் கழுவிக்குடித்ததும் உறுதியாகி விட்டது. அவர் பஞ்சா எடுத்தது, அதைக் கழுவிக் குடித்ததும் உறுதியாய் விட்டது. அவர் பஞ்சா எடுத்தது, அதைக் கழுவிக்குடித்தது ஆகியவைகள் உண்மையானதென்று, படேசாவின் நண்பரான பொதக்குடி மௌலானா மௌல்வி ஜனுப் அப்துல் கரீம் சாஹிப் அவர்கள் ஒப்புக்கொண்டு விட்டார்கள். பஞ்சா எடுப்பது, அதைக் கழுவிக் குடிப்பதாகிய ஹராமும், ஷிர்க்குமான பாபங்களை சூபியாக்கள் செய்யவில்லை. சூபியாக்கள், இத்துற் செய்கைகளுக்குத் தாவீல் செய்யவுமில்லை.)

பஞ்சா எடுப்பது, அதைக்கழுவிக் குடிப்பது போன்ற காரியங்கள் இஸ்லாம் மார்க்கப்படி "பித்அத்தும" "ஹராமும்" "ஷிர்க்கு" மாகும். பஞ்சா எடுப்பது, அதைக் கழுவிக்குடிப்பது முதலியவைகளைச் செய்கிறவர்கள் எப்படிப் பட்டவர்களாயினும், அது இஸ்லாம் மார்க்கத்தில் விலக்கப்பட்ட "ஹராம்" "ஷிர்க்கு" என்பதை ஆக்ஷேபிக்க முடியாது. இஸ்லாம் மார்க்கப்படி ஹராமாகவும், ஷிர்க்காகவும் உள்ள விலக்கப்பட்ட துற்செயல்களை சதா செய்து கொண்டிருப்பவர்களை, வலி என்று இஸ்லாம் மதம் ஏற்றுக் கொள்ளுமென எதிர் பார்ப்பது அறிவீனமேயாகும்.

இப்போழ்து மதராஸில் அரசாங்க குமஸ்தாவாக விருக்கும் படேசா சாஹிப் மஞ்சக்குப்பத்தில் பஞ்சா வைத்து, அது சம்பந்த

மான எல்லா வைபவங்களையும், அவரே முன்னின்று அநேக வருடங்களாக நடத்தி வருகிறாரென்பது உலகப்பிரசித்தம். இது விஷயத்தில் சந்தேக முள்ளவர்கள் ஸைபுல் இஸ்லாம் பத்திராதிபர் 1916-ல் வெளியிட்டிருக்கும் பிரசுரத்தைப்பார்த்து தங்களுடைய சந்தேகத்தை தீர்த்துக் கொள்ளலாம். மேற்படி பிரசுரத்தில் படேசா பஞ்சாவை முன்னின்று நடத்துகிறாரென்று, வரைந்து, அந்த வெகு அழுத்தமாகக் கண்டிக்கப் பட்டிருக்கிறது. அதற்குப் பிறகும் படேசா பஞ்சா வைபவத்தை நடத்திவருகிறாரென பல விளம்பரங்கள் வெளி வந்திருக்கின்றன. ஆயினும், படேசாவின் சிநேகிதர்கள் படேசாஹிபு பஞ்சா வைபவத்தை நடத்தி வருவதை, ஒழுங்கான முறையில் ஒப்புக்கொள்ளாமலும், சிற்சில விஷயங்களை யொப்புக் கொண்டாலுங்கூட, அதற்குப் பொருத்தமற்ற சமாதானங்களைக் கூறியும், பொது ஜனங்கள் உள்ளதை உணரா வண்ணம், வேண்டிய முயற்சி செய்து வந்தார்கள். ஆகவே, படேசா பஞ்சா வைபவத்தை நடத்தி வருகிறாரென்று சிலரும், படேசா அப்படிச் செய்யவில்லை என்று மற்றும் சிலரும் இருவகையாகப் பல வருடங்களாய் வார்த்தையாடி வந்தார்கள்.

ஹிஜ்ரீ 1343வது முஹர்ரம்மாதத்தில் கூத்தாநல்லூர் மௌல்வி ஜனாப் முஹம்மத்அலி சாஹிபவர்கள், மஞ்சகுப்பம் சென்றிருந்தார்கள். அவ்விடத்தில் படேசாஹிபு பஞ்சாவைபவத்தைத் தானே முன்னின்று செய்துவருவதையும், மேளக்காரர்களுக்கு அவர் கூலி பட்டுவாடா செய்ததையும், பஞ்சாவைக் கழுவிக்குடித்ததையும், இன்னும் பல விஷயங்களையும், மௌல்வி அவர்கள் நேரில்பார்த்து ஸைபுல் இஸ்லாம் பத்திரிகைக்கு எழுதியபின் இறுதியில், மேற்கண்ட ஹராமும், ஷிர்க்குமான விலக்கப்பட்ட துற்காரியங்களைச் செய்துவருபவரை "குத்புஸ்ஸமான்" என்று சொல்லும், கனவான்கள் யோசித்துப் பார்க்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப் பட்டிருந்தார்கள்.

ஜனாப் மௌல்வி முஹம்மத்அலி சாஹிபவர்கள், படேசா பஞ்சா எடுத்தது சம்பந்தமான காரியங்களில் சிலவற்றை நேரில் பார்த்தும், சிலவற்றைப் பாராமல் படேசாஹிபின் விரோதிகள் சொன்னதைக் கேட்டும் பத்திரிகைக்கு எழுதியிருப்பதாகவும், அவை எல்லாவற்றையும் படேசாஹிபு செய்திருந்தாலுங்கூட, அவரை வலியல்லவென்று சொல்ல முடியாதென்றும் கூத்தாநல்லூர் கனம் ஜே. எ. எம். சேகுத் தாவுதுசாஹிப் அவர்கள் ஒரு பிரசுரத்தை வெளியிட்டார்கள்.

மௌல்வி முஹம்மத்அலி சாஹிபவர்கள், பிரஸ்தாப விஷயத்தைப்பற்றி, ஸைபுல் இஸ்லாமில் வெளியிட்டிருந்தவைகளுடன், மேற்

கண்ட கனம் ஷேக்தாவுத் சாஹிபவர்கள் ஒப்புக்கொள்ளுவது நீங்க லாக, ஒப்புக்கொள்ளாத விஷயங்களை வெளியிட்டால் அவைகளை நிரூபிக்கத்தயாராக இருப்பதாகவும், அதற்காக ஒரு கூட்டத்தை மஞ்சகுப்பத்தில் கூட்டவேண்டுமென்றும், ஜனுப் மௌல்வி முஹம் மத்அலி சாஹிப் அவர்கள் விடுத்துள்ள விளம்பரத்தை எவரும் அல க்ஷியம் செய்து விடமுடியாது.

இதற்கு மேற்கண்ட கனம் ஷேக்தாவுதுசாஹிப் அவர்கள், தகுந்த விடையளிக்காமல் உபயோகமற்ற ஒரு பிரசுரத்தை வெளி யிட்டார்கள். அதில் படேசா பஞ்சாவைபவத்தை நடத்தினாரென் பதை ஒப்புக்கொள்ளுகிறார்களென்றும், அல்லது மறுக்கிறார்களென் றும் எளிதில் தெரிந்துகொள்ள முடியாத சிக்கலான வார்த்தைகளை உபயோகித்திருந்தார்கள். அன்றியும் படேசாவை வலியல்ல வென் பதற்கும், மஞ்சகுப்பம் சென்று படேசாவின் பஞ்சாவைபவத்தை விசாரிப்பதற்கும் விலாயத்துடைய இல்மும், 70-முதலிய ஷாத்து களுமிருக்க வேண்டிய தவசிய மென்றும் வரைந்திருந்தார்கள். அதில் படேசா பஞ்சா எடுத்தாரென்பதை மறுத்திருக்கிறாராயினும், படேசா பஞ்சா எடுத்தது, அதைக்கழுவிக் குடித்தது முதலிய துற் காரியங்களை மறைக்கமுடியாதென்பது, நண்பர் ஷேக்தாவுது சாஹிபு அவர்களுக்கு நன்றாகத் தெரியுமாதலால், ஹாரமும் ஷிர்க்குமாகிய விலக்கப்பட்ட அத் துற்காரியங்களை வெகு காலமாகச் செய்துவரும், படேசாவை வலியென்று தீர்மானிக்க மிகவும் கஷ்டப்படுகின்றார்கள்.

படேசா பஞ்சாவைபவத்தை நடத்துவது, அதைக் கழுவிக் குடிப்பது, "ஹஸன் ஹுசேன் சபா என்னும் சரித்திரத்தை நாடக ரூபமாக நடத்துவது முதலியவைகள் உண்மைதானென, படேசாஹிபின் ஆப்த நண்பரான பொதக்குடி மௌல்வி ஜனுப் அப் துல் கரீம் ஆலிம் சாஹிபவர்கள் ஒப்புக்கொண்டு விட்டதாகத் தெரி கிறபடியால், அதை மற்றவர்கள் இனி ஆக்ஷேபிக்க இடமில்லாது போய்விட்டது.

பஞ்சாவைபவத்தை நடத்தி, பஞ்சாவை கழுவிக் குடிப்பது முதலிய ஹாரமும், ஷிர்க்குமான துற்காரியங்களைச் செய்கின்ற படேசாவை, இஸ்லாமார்க்கம் வலியென்று ஏற்றுக் கொள்ளுமா வென் பதைப் பற்றியே, நாம் இப்போது ஆராயவேண்டிய தவசியமாக இருக்கிறது.

இஸ்லாமார்க்க ஏவலை எடுத்து, விலக்கலைவிட்டு நீங்கிக்கொள்ள வேண்டியது அவுலியாக்களுக்கு மிகவும் அவசியமானதாகும். நல்ல காரியங்களுள் சிறிய "முஸ்தஹப்பான" வைகளைக் கூடவிடாமல்

செய்துவருவதோடு, விலக்கப்பட்டவைகளுள் சிறிய மக்ரூஹைக் கூட செய்யக் கூடாதென்பது வலியாகுவதற்கு முக்கியமான நிபந்தனை என, சூபியாக்களின் கிரந்தங்களில் வரையப்பட்டிருக்கின்றன.

ஆகவே, விலக்கப்பட்டவைகளுள் பெரும்பாவமாகிய ஹறாமும், ஷிர்க்குமான பஞ்சாவைபவத்தை நடத்தி, அதைக் கழுவிக்குடித்து, மற்றவர்களைக் குடிக்கும்படிச் செய்த படேசாஹிபு வலியாக மாட்டா ரென்பது பிரத்தியக்ஷம்.

படேசா வலியல்லவென்று மறுத்து இன்காறு செய்யக்கூடிய இரண்டு பிரசுரங்கள் "அவுலியாக்களின் வருணனை" என்னும் நாமமிட்டு கூத்தாநல்லூர் S. S. முஹம்மது இஸ்மாயீல் ஆலிம் சாஹிபு அவர்களால் வெளியிடப்பட்டிருக்கின்றன.

படேசாவை வலியென்று நிரூபிக்கும் நோக்கத்தோடு "பிரதான பிரகடனம்" என்னும் பெயரிட்டு, இரண்டு பிரசுரங்கள் கூத்தா நல்லூர் ஷெ ஜே. ஏ. எம். ஷேக்தாவுது சாஹிபவர்கள் வெளியிட்டிருக்கின்றார்கள்.

வருணனை என்னும் பிரசுரங்களில் வலியாகுவதற்கு வேண்டிய நிபந்தனைகளைப்பற்றியும், அவுலியாக்களின் லக்ஷணங்களைப்பற்றியும், அவர்களில் ஏதேனும் பாவமான காரியங்கள் நிகழ்ந்ததாகச் சொல்லப்படுமாயின், அதற்கு தாவீல் செய்யவேண்டிய முறைகளைப் பற்றியும், (இன்னவிதமானவர்களைப் பற்றி தாவீல் செய்யப்படுமென்றும், இன்னவிதமானவர்களை இன்காறு செய்யவேண்டுமென்றும் விபரித்து) படேசா தாவீல் செய்யப்படும் கூட்டத்தைச் சேர்ந்தவரல்ல வென்பதற்கு, சூபியாக்களின் கிதாபுகளிலிருந்து தக்க ஆதாரங்காட்டியும், எழுதப்பட்டிருக்கிறதும் தவிர, படேசா செய்து வரும் ஹறாம், ஷிர்க்கு முதலிய பாவங்களுக்குத் தாவீல் செய்ய எவ்வகையிலும் முடியாதென்பதை வெகு தெளிவாக வரையப்பட்டிருக்கின்றது.

வருணனையில் பாவங்களைச் செய்யாதிருப்பது வலியாவதற்குரிய நிபந்தனையென ஜாமிவுல் உசூல் பில் அவுலியாவுடைய கருத்துக்களை எடுத்தெழுதப்பட்டிருக்கின்றன. அன்றியும் வலியாகுவதற்கு வேண்டிய நிபந்தனைகளின்படி, யாரேனுமொருவர் வலி என்று திட்டமானதற்குப் பிறகு, அவரால் ஏதேனும் பாவமானவைகள் நிகழ்ந்ததாகச் சொல்லப்படுமாயின், அவர்களைப்பற்றி முன்னோர்களின் அபிப்பிராயங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. தாவீல் செய்வதற்காக இமாம் யாபிஇய்யீ (ரஹ்) அவர்கள் ரௌளுர்ரயாஹீனில் கூறியிருக்கும் சட்டதிட்டங்களை கவனித்த எவரும், படேசா

தொடர்ச்சியாய்ச் செய்துவரும் பல ஆகாத துற்காரியங்களுக்குத் தாவீல் செய்ய முற்படமாட்டார்கள்.

படேசாவை வலி என்று நிரூபிக்கும் நோக்கத்தோடு பிரகடனம் என்னும் பிரசுரத்தை வெளியிட்டவர், படேசாவின் துற்காரியங்களுக்குத் தாவீல் செய்யவேண்டிய வழியை விவரிக்கவில்லை. படேசா தாவீல் செய்யப்படும் கூட்டத்தைச் சேர்ந்தவர் என்பதற்கு, சூபியாக்களின் கிதாபுகளிலிருந்து தகுந்த ஆதாரங்களைக் காட்டவுமில்லை. அதில் ஆபாச மொழிகளே நிறைந்திருந்தன. படேசா வலியென்பதை தகுந்த அத்தாக்ஷிகளால் நிரூபித்த பிறகல்லவா அவருடையக் குற்றச்செயல்களுக்கு, அவருடைய நண்பர்கள் தாவீல் செய்ய முன்வரவேண்டும் ? படேசாவை வலியென்று உறுதி செய்வதற்கு வேண்டிய சாதனங்கள் படேசாவின் நண்பர்களுக்கு இல்லை.

படேசாவை ஈசாவென்றும், மஹ்தீஎன்றும், வலியென்றும் கூறி பிரசாரம்செய்து வந்த ஜனுப் மௌல்வி அப்துல்கரீம் சாஹிபவர்கள் முதலாவதாக படேசாவை வலி யென்று நிரூபிக்கவேண்டும். பிறகு அவருடைய துற்செய்கைகளுக்குத் தாவீல் செய்ய அவருடைய மற்ற நண்பர்களும் வெளிக்கிளம்பி யிருக்கவேண்டும்.

படேசாவை வலி என்றும், அவர் செய்யும் துற்செய்கைகளைப் பற்றி எதுவும் பேசக்கூடாதென்றும், அப்படிப் பேசுகிறவர்கள் 70 முதலிய ஷர்த்தை உடையவர்களாக இருக்கவேண்டுமென்றும் அவர் செய்யும் ஷிர்க்கும், ஹராமுமான (பஞ்சா எடுப்பது, அதைக் கழுவிக் குடிப்பது முதலிய) பாவங்களுக்கு தாவீல் செய்யப்பட வேண்டுமென்றும் கூறின ஜே. ஏ. எம். ஷேக்தாவது அவர்கள் படேசா வலிதானென்பதற்குத் தகுந்த ஆதாரங் காட்டாதிருந்தது நியாயமா?

படேசாவில் விலாயத்துடைய அம்சங்கள் இருப்பதாக ருஜூப்பிப்பதற்குத் தகுந்த அத்தாக்ஷிகள் இல்லாதிருக்கும் ஸ்திதியில் அவரை வலியென்று சொல்லி, அவருடைய துற்செய்கைகளுக்குத் தாவீல் செய்யவேண்டுமென்று அவருடைய நண்பர்கள் முயன்றதேனோ? முதலாவதாக படேசாவை வலியென்று நிரூபியுங்களென அவருடைய நண்பர்களைக் கேட்டபோது, படேசாவை வலியென்று நாங்கள் கூறவில்லை என்று பிதற்றினார்கள். படேசா ஹஸ்ரத்தவர்கள் வலியாவார்களென்பதற்கோர் பிரதான பிரகடனம் என்று மகுடமிட்டு பிரசுரத்தை வெளியிட்டவரே, பிறகு அவரை வலியென்று தாம் கூறவில்லை என்று வரைந்திருக்கின்றார். இவர்களுடைய கூற்று பெரும் வியப்பைத் தருகின்றது. படேசாவை வலியென்று நிரூபிக்க அவருடைய நண்பர்களுக்குச் சாத்தியமில்லாது போய்விட்ட

தால், படேசாவின் துற்செய்கைகளுக்குத் தாவீல் செய்யவேண்டுமென்று, எடுத்துக்கொண்ட பிரயத்தனங்களெல்லாம் கானலைப்போல் பறந்துவிட்டன.

வருணனை முதல் பாகத்தில் அவுலியாக்கள் பாவம் செய்ய மாட்டார்கள் என்று எழுதிவிட்டு, அதற்கு மாறாக வருணனை இரண்டாம் பாகத்தில் அவுலியர்க்களில் ஒருவகையார் பாவம் செய்ததாகவுமெழுதியிருப்பதாக, பிரகடனக்காரர் ஆச்சரியப்பட்டிருக்கின்றார்; அவருடைய அறியாமையே அவருடைய ஆச்சரியத்திற்குக் காரணமாகும். ஏனென்றால் வருணனை முதல்பாகத்தில் ஒருவர் வலியாகுவதற்கு வேண்டிய ஷர்த்துகளை விபரித்து, அதற்கு விரோதமாக பாவம் செய்து கொண்டிருப்பவர்கள் வலியாக முடியாதென்று வரையப்பட்டிருக்கின்றது. இரண்டாம் பாகத்தில் வலியாகுவதற்கு வேண்டிய ஷர்த்துகளின்படி வலியென்று நிச்சயிக்கப் பட்டிருப்பவர்களால், ஏதுவும் பாவம் நிகழ்ந்ததாகச் சொல்லப்படுமாயின், அதற்கு மட்டும் தாவீல் செய்யும் விஷயத்தை விவரிக்கப்பட்டிருக்கின்றது. (வருணனை இரண்டாம்பாகம் 8-வது பக்கத்தைப்பார்க்க). ஆனதுபற்றியே வருணனை முதல்பாகம் 10-வது பக்கத்தில் அவுலியாக்கள் நபிமார்களைப்போல் மஅஸூம்களல்லவாதலால், அவுலியாக்களுடைய வாழ்க்கையில் தவறுதலாக ஏதும் பாவங்கள் நிகழக் கூடுமென எழுதப்பட்டிருக்கிறது.

ஒரு மனிதனை வலியென்று நிரூபிக்கவேண்டிய ஒழுங்கின்படி வலியென்று நிரூபிக்கப்படாதிருக்கும்போது, அவன் பாவங்களைச் செய்துவருவதாக ஏற்பட்டால் அவனை பாவியென்று தீர்மானிக்கப்படுமேயன்றி, வேறொன்றும் ஏற்படப்போவதில்லை; ஆகவே, அவனை வலியென்றும் பிதற்றமுடியாது. பாவங்களைச் செய்துவரும் ஒருவன் வலியாகமாட்டானென்பதற்கும் வலியென்று நிச்சயிக்கப்பட்டுபோனவரால் ஏதும் பாவம் நிகழுமாயின், அதற்குத் தாவீல் செய்யப்படுமென்று சொல்வதற்கும் விசேஷ வித்தியாசங்களுண்டு. அது ஒன்றுக்கொன்று முரண்பட்டதல்லவென்பதை ஞானமுள்ளவர்கள் எளிதில் தெரிந்து கொள்ளலாம். வருணனையில் கூறப்பட்டவைகளெல்லாம் சூபியாக்களின் கொள்கையேயாதலால், அவைகள் ஒன்றுக்கொன்று முரண்படமுடியா. ஆயினும் பிரகடனக்காரருக்கு சூபியாக்களின் கிரந்தங்களை எடுத்து பார்த்தறியும் பாக்கியமில்லாவிடின் நாமென் செய்வோம்.

படேசாவை வலியல்லவென்று திட்டப் படுத்துவதற்கு, மஷ்ஹூரான வலிமார்களால் தான் தெரிந்துகொள்ள வேண்டுமென்று

பிரகடனத்தில் குறிப்பிடுகின்றார். வலியாகுவதற்கு சூபியாக்களின் கிதாபுகளில் சொல்லப்பட்டிருக்கும் ஷாத்துகள் படேசாவினிடம் இல்லாததால், அவர் வலியல்லவென்றும், இன்காறு செய்யப்படவேண்டியவராக இருக்கிறாரென்றும், சூபியாக்களின் கிதாபுகளை ஆதாரம்காட்டியே, வருணனையில் படேசாவை வலியல்லவென்று மறுத்து இன்காறும் செய்யப்பட் டிருக்கிறது. ஆகவே, படேசாவை வலியல்லவென்று சொல்லுகிறவர்கள் மஷ்ஹூரான வலிமார்களைப் பின்பற்றாமல் எழுதி விட்டதாக அவர்களின்மீது குறை கூறமுடியாது. மஷ்ஹூரான வலிமார்கள் இன்னதுதான் சொல்லி யிருக்கிறார்களென்று அறியப்படாத வகையிலும், படேசா இன்கார் செய்யப்படவேண்டிய வகையைச் சேர்ந்தவரென்று நிரூபிக்கப்பட்டும் விட்டது. ஆகையால், படேசா இன்காரு செய்யப்படும் கூட்டத்தைச் சேர்ந்தவரென்று நிச்சயமாய் விட்டதன்றோ?

படேசா வலியல்லவென்று எவையெவை ஆதாரமாகக் கொண்டுவரப்படுமோ அவைகளை சனத்துடன் தாங்கள் மறுப்பவர்களென பிரகடனத்தில் கூறுகின்றார். அது உண்மையாயின், வலியாகுவதற்கு பாவங்களைவிட்டு விலகியிருக்க வேண்டு மென்னும் ஜாமிஉல் உசூலுடைய வாக்கியத்தை எந்த சனதோடு பிரகடனக்காரர் மறுத்திருக்கின்றாரோ தெரியவில்லை.

இமாம் யாபிய்யி (ரஹ்) தாவீல்செய்வதற்காக கூறியிருக்கும் சட்ட திட்டங்களின்படி படேசாவின் துற்செய்கைகளுக்குத் தாவீல் செய்ய பிரகடனக் காரரால் சாத்தியப்படுமா? அல்லது இமாம் அவர்கள் முடிவாகச் சொல்லி யிருக்கும் சட்டத்தை மறுக்க முடியுமா? முடியுமாயின் அதை பிரகடனத்தில் வரையாமலிருக்க வேண்டியதேன்? இமாம் யாபிய்யி அவர்களின் சட்டங்களை ஆக்ஷேபிக்கமுடியாது பரிதாப நிலைமையிலிருப்பவர் வீணான பிரசுரங்களை வெளியிட்டு, ஜனங்களை வழி கெடுக்கலாமா? பெரியோர்களுடைய சட்டங்களை ஆக்ஷேபிக்க பிரகடனக்காரருக்கு ஆபாசமொழிகளே சாதனம்போலும்! இந்த ஸ்திதியில் படேசாவின் துற்செய்கைகளுக்குத் தாவீல் செய்ய பிரகடனக்காரர் எடுத்துக்கொள்ளும் பிரயத்தனங்கள் ஆச்சரியத்தைத் தருகின்றது. பாபம் செய்யும் படேசாவை பாபி என்று சொல்லி அவரை வலியல்லவென்று இன்காறு செய்வதற்கு 70 ஷாத்துகள் வேண்டுமென்று சொல்லப்படுமாயின் பாபம்செய்கிற ஒருவரை வலியென்று சொல்லி அவர் செய்யும் பாபத்திற்குத் தாவீல் செய்யும் பிரகடனக்காரருக்கு எத்தனை ஷாத்துகள் வேண்டுமென்பதை அறிந்திருப்பாராயின், இவர் பிரகடனத்தைத்

எழுதத்துணிந்திருக்கமாட்டார். வேஷதாரிகள் செய்யும் பாபங்களுக்கு காரணமின்றி தாவீல் செய்ய எவரும் முற்பட்டு விடுவார்களானால்; பொதுமக்கள் பாபத்தைச் செய்துவிட்டு அதற்கு ஏன் தாவீல் செய்யமாட்டார்கள்! படேசா செய்யும் பாபங்களுக்குமட்டும் தாவீல் செய்யலாமென்று பிரகடனக்காரர் கூறுவாராயின் அதற்குத் தக்க ஆதாரம் காட்டவேண்டும். ஆதாரம் கேட்கும்போது படேசாவை வலியென்று தாம் தாவாச்செய்யவில்லை, என்று சொல்லி மழுப்புகின்றார். இவைகளைக் கற்றுணர்ந்தோர் கண்டிக்காது மௌனம் சாதித்து விட்டால் எவரும் அச்சமின்றி பாபத்தைச் செய்துவிட்டு அதற்குத் தாவீல் செய்யத்துணிந்து விடுவார்கள் என்பதை எச்சரிக்கின்றோம். பாவம்செய்கிறவனை பாவி யென்று சொல்லி அவனை வலி அல்லவென்பதற்கு குர்ஆனும் ஹதீதுகளுமே போதுமானது, பாவம்செய்யும் ஒருவனை வலி என்று சொல்வதற்குத்தான் ஷர்த்துக்கள் வேண்டும், மஷ்ஹூரான வலிமார்களைப் பின்பற்றவும் வேண்டும். இதைத்தான் "இமாம் யாபிஇய்யி" விபரித்துள்ளார்கள். பிரகடனம் எவ்வித அத்தாக்ஷிகளையும் வைத்திருக்கவில்லை. ஆதலால், அது முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய பிரசுரமன்று.

பஞ்சா வைபவத்தின் உண்மையைத் தெரிந்துகொள்வதற்காகவும், தீர விசாரிக்கும் பொருட்டும் கனம் அ. மூ. மூ. கமூ. அ. அ. மு. மு. இம் மூவரும் மஞ்சகுப்பம் சென்றிருந்ததாக பிரகடனக்காரர் குறிப்பிடுகின்றார். பேஷ், பிரகடனக்காரரும் வழிக்குவந்துவிட்டாரெனக் கருதுகிறோம். ஏனென்றால்? படேசா பஞ்சாவைத்த உண்மையை நிரூபிப்பதற்காக, மஞ்சகுப்பம் வாருங்களென்று படேசாவின் நண்பர்களை அழைக்கப்பட்டபோது, அதை விசாரிப்பதற்கு விலாயத்துடைய இல்மும், எழுபது முதலிய ஷர்த்துகளும் வேண்டுமென்று கூறின பிரகடனக்காரர், மேற்கண்ட மூவர்களும் பஞ்சா விஷயத்தை விசாரிப்பதற்காக மஞ்சகுப்பம் சென்றிருந்தார்களென அறிவிக்கின்றார். இம்மூவரும் விலாயத்துடைய இல்மும், 70-முதலிய ஷர்த்துகளும் உள்ளவர்களா? வென்று நாம் பிரகடனக்காரரைக் கேட்கின்றோம். ஒருவர்செய்யும் குற்றத்தை விலக்கவும் கண்டிக்கவும் ஒவ்வொரு முஸ்லிமும் கடமைப் பட்டுள்ளாரென்பதை பிரகடனக்காரர் ஒப்புக்கொண்டாலொழிய, அம்மூவரும் மஞ்சகுப்பம் சென்றிருந்தார்களென்பதை பிரகடனத்தில் வரைய நியாயமே இல்லை. (இவருக்கு அல்லாஹுத்தஆலா ஹிதாயத்துச் செய்வானாக).

பஞ்சா எடுப்பது போன்ற ஹராமும், ஷிர்க்குமான காரியங்களை அகற்றுவது சகல முஸ்லிம்களின் மீதும் கடமை யல்லவா?

இக்கெடுதியை நீக்கி அவர்களை நேர்வழியில் சேர்ப்பது அவசியமல்லவா? இதனால் தான், நமது நாயகம் ரசூல் சல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், அடியில் வருமாறு திருவுளமானார்கள். "யாராவது ஒருவர் கெடுதியைக்கண்டாராயின், அதைக் கையினால் விலக்க வேண்டும். இதற்கு சக்தி பெறவில்லையானால், நாவினால் விலக்க வேண்டும் இச்சக்தியுங் கூட இல்லாதிருக்குமாயின், ஹிருதயத்தால் வெருக்கவேண்டும். இந்த நிலைமை ஈமானின் விசேஷ பலக் குறைவை உடையதாயிருக்கும்" என்பதே. நல்ல காரியங்களை ஏவுவதையும், கெடுதிகளை விலக்குவதையும் குர்ஆன் ஷரீப் வற்புறுத்துகின்றன. இவ்வூழியம் ஒவ்வொரு முஸ்லிம்களின் மீதும் கடமையர்க்கப்பட்டு விட்டது. இதனைச் செய்யாத ஒவ்வொரு முஸ்லிமும் தன்னைக் குற்றவாளியல்லவென்று நினைக்க முடியாது.

பிரகடனக்காரர் வருணனையில், ஏற்படாத விஷயங்களை எல்லாம் கலந்து, ஏட்டை நிறைத்து, விற்பனைசெய்து வருவது காசடிக்கும் நோக்கமாவென்று வினவுகிறார். முஸ்லிம்களே! கேளுங்கள்!

வருணனையாகிறது பிரயோஜனமற்ற பாட்டல்ல, பதங்களல்ல. முஸ்லிம்களுக்கு விஷய ஞானத்தை வளர்க்கக் கூடிய ஓர் அறிய நூலாயிருக்கும். அது முஸ்லிம்களின் நன்மைக்காக எழுதப்பட்டது. அதன் சிலவில் சகல முஸ்லிம்களும் பங்கெடுக்கப் பாத்தியப்படுவார்கள். இதனைக் காசடிக்கும் நோக்கம் என்றால், முஸ்லிம்கள் எத்தனையோ நூல்கள் எழுதி விற்பனை செய்து வருகிறார்களே? அவைகளையும் காசடிக்கும் நோக்க மென்றுதான் சொல்லுவாரோ? வடதேசத்து உலமாக்கள் காதியானிகளின் விஷயமாக எத்தனையோ ரிஸாலாக்கள் எழுதி அச்சிட்டு விற்றுவருகிறார்கள். அவைகளை பிரகடனக்காரர் கவனித்தாரில்லை போலும். ஏற்படாத எந்த விஷயங்களைக் கொண்டு ஏட்டை நிறைக்கப்பட்டிருக்கிறதென்பதையாவது நிரூபிப்பாரா? விஷயங்களை உணராமல், மனம் புழுங்கித் தாறுமாறாய் உளருவதுபோலிருக்கின்றது. காசடிக்கும் நோக்கம் தெரிய வேண்டுமானால், தன்னைப் பார்க்க வருபவர்களிடம் பணத்தை வாங்கிக் கொண்டு, அவர்களுக்கு வழிச்சிலவுக்கும் கொடாமல் தவிக்கவிடும் பெரிய குருவை கவனிப்பாராக.

முடிவுரை

படேசா பஞ்சா வைபவத்தை அநேக வருடங்களாக நடத்திவருகிறார். பஞ்சாவைத் தூக்கி ஊரைச் சுற்றும்படி உத்திரவு கொடுப்பதற்காக, படேசா தன் வீட்டிலிருந்து மேள வாத்தியத்தோடு செல்லுகின்றார். படேசா உத்திரவு கொடுத்த பிறகே, பஞ்சாவைத்

தூக்கி ஊரைச்சுற்றுகிறார்கள். பஞ்சாவை ஊர்வலம் செய்துகொண்டு திரும்பிவந்த பிறகு, படேசாவின் அனுமதியைப்பெற்றே கீழே இறக்குகின்றார்கள். பஞ்சாகழுவிய தண்ணீரை மற்றவர்களைப்போல் படேசாவும் குடிக்கின்றார். ஹஸன்ஹுஸைன் என்ற நாடகத்தையும் நடத்துகிறார், ஒவ்வொரு ஊர்வலமும் முடிந்தபிறகு மேளக்காரர், லேட்டுக்காரர் முதலியோருக்குக் கூலியும் படேசாதான் கொடுக்கின்றார். (படேசா மேளக்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் கூலி கொடுத்துக் கொண்டிருக்கும்போது, கூத்தாநல்லூர் ஜனாப் மவ்லவி முஹம்மத் அலிசாஹிப் அவர்கள் நேரில்கண்டு கொண்டார்கள். ஆகவே, தாம் தருமத்தை உத்தேசித்து பஞ்சா முதலியதுகளை நடத்துவதாக, மவ்லவி சாஹிப் அவர்களிடத்தில் படேசாவே சொல்லியு மிருக்கின்றார்.)

எந்தவலியாவது மேற்கண்ட ஹாராமும் ஷிர்க்குமான பாபக்காரியங்களைச் செய்திருக்கின்றார்களா? ஹாராமும் ஷிர்க்குமான மேற்கண்ட பாபங்களை தொடர்ச்சியாய்ச் செய்து வந்தவர்களில் எவரை யாவது வலியென்று முன்னோர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்களா? பஞ்சா எடுப்பது, அதைக் கழுவிக்குடிப்பது முதலிய ஹாராமும் ஷிர்க்குமான பாபங்களுக்கு முன்னோர்கள் தாவீல் செய்திருக்கின்றார்களா? பஞ்சா எடுப்பது, அதைக்கழுவிக்குடிப்பது முதலிய ஹாராமும், ஷிர்க்குமான காரியங்கள் மட்டுமின்றி, தாடியை அடியோடு வெட்டி விடுகிறார். பட்டுஆடைகளை உடுத்திக்கொள்ளுகிறார். ஜனங்களிடத்தில் காசை அபகரிக்கிறார். படேசா தான் மதக்கல்வியைப் படிக்காதது போலவே, தன்னுடைய பிள்ளைகளுக்கும் மதக்கல்வியைப் படித்துக் கொடுக்காமல், அதிகப் பணச்சிலவு செய்து ஆங்கிலத்தைப் படிக்கச் செய்கின்றார்.

அரசாங்கத்தில் குமாஸ்தா வேலைசெய்து சம்பளமும் வாங்கு கின்றார். படேசா மற்ற நேரங்களில் தொழுதாலுங்கூட ஆபிஸி லிருக்கும் நேரத்தில் தொழுகவேண்டிய தொழுகை சதா தொழுவ தாகத் தெரியவில்லை. படேசா நோன்பு நோர்க்காமலிருப்பதோடு, நோன்பு நோர்ப்பவர்களைப் பரிகாசமும் செய்திருக்கின்றார். படேசா தன்னை ஜனங்கள் வலி என்றும், மஹ்தீ என்றும், ஈசா என்றும் சொல்லும்படி எத்தனையோ பிரச்சாரம் செய்கிறார். முஸ்லிம் சகோதரர்களே! இப்படிப்பட்ட ஒரு நபரை இஸ்லாம்மார்க்கம் வலி யென ஏற்றுக்கொள்ளுமென்று நினைப்பது அறிவீனமல்லவா?

முஹம்மத் ஹுஸைன்,
பண்டாரவாடை.

கூடற் குமாரனுக்கு ஓர் எச்சரிக்கை.

ஜனாப். பா. தாவுத்ஷாவின் உண்மை கொள்கையாது?

ஜனாப். பா. தாவுத்ஷாவிடம் சில கேள்விகள்.

ஜனாப். ஹகீம். அ. ச. முஹம்மது காசிம் சாஹிப் ரெங்கூனிலிருந்து

எழுதுகிறார்.)

சென்ற நவம்பர் மாதம் வெளியான "தாருல் இஸ்லாம்" சஞ்சிகையில் "ஒரு பகிரங்கக் கடிதம்" என்று மகுடம் சூட்டப்பட்டு "கூடற் குமரன்" என்ற கைசாத்துடன் பிரசுரிக்கப்பட்டுள்ள கடித வியாசத்தைக் கண்ணுற்றேன். அதில் தமிழ்நாட்டு எல்லா முஸ்லிம் பத்திராதிபர்களையும், மௌலவிகள், மௌலானாக்கள், செய்கு சாதாத்துமார்கள் முதலிய பெரியார்களையும், மடமையும், பொறாமையும் உருவாகக்கொண்ட கூடற்குமரன் அவமரியாதையாக ஆபாஸ மொழிகளைக்கொண்டு அலங்கரித்து, இழிகுலத்து கீழ்மக்கள் பேசுவதைப் போல் முறைத்தவராய் வரைந்துள்ளார். "குலத்தளவே உண்டாம் குணம்" என்பதற்கேற்பவே குமரனின் கூற்றுகள் இருக்கின்றன. கூடற்குமரன் முக்காடுபோட்டு மூலையில் குந்தி தன்னை மறைத்துக் கொண்டு, புனைப்பெயருடன் வெளிவந்திருப்பதால், அவ்வறிவிலி இன்னானென்று திடமாக நான் அறிந்து கொள்ளக்கூடவில்லை. கூடற்குமரனின் வியாசம் "தாருல் இஸ்லாம்" வியாசத்தை ஒத்திருப்பதையும், தாருல் இஸ்லாம் ஆசிரியர் இடையிடையே குறிப்புகள் எழுதியிருப்பதையும் கவனிக்கில், கூடற்குமரன் தாருல் இஸ்லாம் ஆசிரியரின் கற்பனையால் உதித்த, அவருடைய மாயக்குமாரனோவென்று சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. இவ்வித மாயக்குமாரர்களைக் கற்பனை செய்தும், அவர்களைக் கொண்டு தம்மையும், தமது பத்திரிகையையும் புகழச் செய்து கொள்ளுவதும், உலமாக்களை இகழச்செய்வதும் கூடற்குமரனின் குருபிதாவின் தொழிலாகயிருந்து வருவதை பலர் அறிவார்கள். அது எங்ஙனமாயினும் இருக்கட்டும். கூடற்குமரனுடைய சில கூற்றுகளுக்கு மட்டும் ஈண்டு பதில் கூற விரும்புகின்றேன்.

கூடற்குமரனே!

உம்முடைய குருட்டுக் கண்களை விழித்து, பொறாமையால் உம்முடைய ஹிருதயத்தை சூழ்ந்திருக்கும் திரையை நீக்கிப் பார்ப்பீராகில், முஸ்லிம் பத்திராசிரியர்கள் ஐவரும் உம்முடைய குருபிதாவாகிய பா தாவுத்ஷாவுடைய பிரசுரங்கள், சுன்னத்துவல் ஜமாஅத்துக்

கொள்கைக்கு மாறாயிருக்கின்றன வென்பதை, நமது இமாம்களாகிய மார்க்க ஞானம் முதிர்ந்த பெரியார்களுடையவும், குர் ஆன் ஷரீபுக்கு தப்ஸீர் (விரிவுரை) வரைந்த நமது முன்னோர்களாகிய மஹான்களுடையவும் சொற்களை ஆதாரம் காட்டியே எடுத்து விளக்கிக் கூறியிருக்கிறார்கள் என்பதும், உம்முடைய குருபிதாவான பா. தாவுத்ஷா காதியானியைச் சேர்ந்த லாஹூர் பார்ட்டியாகிய அஹ்மதியாக்களின் கொள்கையைச் சார்ந்தவர்தான் என்பதும், பல பிரசுரங்களையும் நேர்முகமாக பினாங்கில் கேட்கப்பட்டக் கேள்விகளுக்கு உம்முடைய குரு அளித்த அஹ்மதியக் கொள்கையான பதில்களையும், "தத்துவ இஸ்லாம்", "தாருல் இஸ்லாம்" சஞ்சிகைகளில் வரையப்பட்ட பல முரண்பட்ட வியாசங்களையும், ஆதாரமாக எடுத்து விளக்கிக் காட்டி நிரூபித்திருக்கிறார் என்பதும் நன்கு புலனாகும். பத்திராசிரியர்களும், ஏனையோர்களும் தக்க ஆதாரங்களைக் கொண்டே உம்முடைய "குருபிதா" அஹ்மதியர்களைச் சேர்ந்தவரென்றும், அவருடைய பிரசுரங்கள் சுன்னத்துவல் ஜமாஅத்துக் கொள்கைக்கு மாறானவைகளென்றும் நிரூபித்திருக்க, அவர்கள் தக்க காரணமின்றி கூறியிருப்பதாக நீர் கூறுவது உம்முடைய குருட்டுத்தனமல்லவா? முஸ்லிம் பத்திராதிபர்கள் வரைந்துள்ள முகாந்தரங்களை நீதக்கண்ணுடைய அறிஞர்கள் ஒப்புக் கொள்ளுவார்கள் என்பதிலையமில்லை. ஆனால், பகுத்தறிவையே மதமாகக் கொண்ட நும்முடைய குரு பிதாவாகிய பா. தாவுத்ஷாவுடைய மந்தப் பகுத்தறிவுக்கு அவர்கள் கூறியுள்ள ஆதாரங்கள் பிடிக்காமற்போவது ஆச்சரியமல்ல. நிற்க, சத்தியார்த்தப் பிரகாசம் என்ற நூல் விஷயமாக, நும்முடைய குருபிதாவின் பத்தி புத்திரன் (நவம்பர் சஞ்சிகை) கர்ப்பத்தில் இருக்கும் பொழுதே, 27-10-26-ல் வெளிவந்த ஸைபுல் இஸ்லாமில் அந்நூலுக்கு கண்டன வியாசங்களும், ஆசிரியர் குறிப்பும் வெளிவந்திருப்பது, உம்முடைய குருட்டுக் கண்ணுக்குப் புலப்படவில்லைபோலும். அவ்விஷயத்தில் முஸ்லிம் சங்கங்களையும், சட்டசபை மெம்பர்களையும், அரசாங்கத்தையும் "ஸைபுல் இஸ்லாம்" தூண்டிவருவதுடன், கவர்ன்மெண்டு மூலமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள தக்க முயற்சி செய்யப்படுவதாகவும், சரியான மறுப்பு உலமாக்களால் எழுதப்படுவதாகவும் ஸைபுல் இஸ்லாம் மூலமாகத் தெரியவருகிறது. மற்ற பத்திராசிரியர்களும் (இன்ஷா அல்லாஹ் நாம் சத்தியார்த்தப் பிரகாசத்திற்கு தக்க மறுப்பை அடுத்த சஞ்சிகைகளில் வரைவோம். ப. ர்.) அவர்களின் கடமையைச் செய்ய தயாராக இருக்கின்றார்கள். சீக்கிரமாகவோ, சற்று நிதானமாகவே, மறுப்பு எழுதியோ, நடவடிக்கை எடுத்

தோ சத்தியார்த்தப் பிரகாசத்தையும், அதுபோன்ற இஸ்லாம் மத தூஷணை நூற்களையும் ஒழிக்க, குர்ஆன் ஷரீபின் பொருள்களை யும், அதன் தப்ஸீர்களின் பொருளையும், அவைகளின் உண்மையான கருத்துகளையும் உள்ளபடி அறியக் கூடிய மார்க்கக் கல்வியை குர்ஆன், ஹதீஸ் இவைகளின் பாஷையாகிய அரபிபாஷையின் மூலமாகக் கற்ற றிந்த உலமாக்களும், பத்திரர்திபர்களுமே லாயக்கானவர்கள் என்பது வெளிப்படை. நம்முடைய குருபிதாவாகிய பா. தாவுத்ஷா-இஸ்லாம் மார்க்கக் கல்விக்கு அசல் பாஷையாகிய அரபிபாஷையையும், இஸ்லா மார்க்கக் கிரந்தங்கள் போதிய வளவு அரபி பாஷையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ள பாஷைகளாகிய உருது, பார்ஸி முதலிய பாஷைகளை அறியாதவராகவும், இஸ்லாம் மார்க்க விஷயங்களில் வெகு சொற்ப விஷயங்கள் தப்பும், தவறுமாக மத இதரவாதிகளா லும், உண்மையான இஸ்லாமார்க்கக் கொள்கைக்கு மாறுபட்டவர் களாலும் மொழிபெயர்க்கப்பட்ட பாஷைகளாகிய இங்கிலீஷ், தமிழ் ஆகிய பாஷைகளில் சொற்பம் கற்றவராகவும் விளங்குகிறார் என்பது உலகமறிந்த விஷயமாகும். ஆகையால், அது சம்பந்தமாக நடக்கும் தர்க்கவாத சபைகளிலோ, நீதிஸ்தலத்திலோ நம்முடைய குருபிதா தலைகாட்ட லாயக்கற்றவராய் இருக்கிறார் என்பதை நீர் உணர்வீராக. உண்மை இப்படியிருக்க; இஸ்லாம் மார்க்கஞானவானை யென்பதை சற்றும் வீசப்பெறாத நம்முடைய வியாசத்தினிடையே "இந்நாட்டு மார்க்கக் கல்வி மத்ரஸாக்களின் மௌலவிகளில் ஒருவராக தம்மை ஆக்காததற்காக ஆண்டவனைத் துதிப்பதாக" குறிப்பு ஒன்று, நம் முடைய குருபிதா எழுதியிருக்கிறார். அந்தோ பரிதாபம்! வெட்க மின்றி தாம் மார்க்கக் கல்விகல்லாத அஞ்ஞானி ஆனதற்கு ஆனந்த மடைய அறிஞரும், இந்நாகரீக உலகத்தில் உளரோ? இந்நாட்டை விட்டு எந்நாட்டிலாவது மார்க்கக் கல்விச்சாலைகளில் நம்முடைய குரு பிதா மார்க்கக் கல்விகற்று தேர்ச்சி பெற்றிருக்கிறாரா? அதுவுமில்லா மலிருக்க, தனது அஞ்ஞானத்திற்குத் தானேமகிழ்ந்துகொள்ளுவது விந்தையினும் விந்தையே. உண்மை இவ்வாறு இருக்க நம்முடைய வியாசத்தின்இடையே, நம்முடையகுருபிதா வரைந்துள்ள மற்றொரு குறிப்பில் "எம்முடைய குர்ஆன் மொழிபெயர்ப்பைப் பின்பற்றிக் கொண்டும், காப்பியடித்துக் கொண்டும், எம்முடைய ஊழியம் சுயநல மானதென்றும், காதியானிவேலை என்றும் தூற்றுகிறார்கள்" என்று கூறுகிறார். குர்ஆன் மொழிபெயர்ப்பை எம்முடைய மொழிபெயர்ப்பு என்று, நம்முடைய குருபிதா வெட்கமின்றி எங்ஙனம் கூறுகிறார்? குர்ஆனுடைய ஒரு பதத்திற்கும் மொழி பெயர்க்க ஆற்றலற்ற நம்

முடைய குருபிதா எம்முடைய குர்ஆன் மொழிபெயர்ப்பு எனக்கூறு வதுபுரட்டும், பொய்யுமல்லவா? நம்முடையகுருபிதா வெளியிட்டிருப்பது குர்ஆனைத் தப்பும்தவறுமாக ஆரியர்களைப் போல், லாஹூர் அஹ்மதியர் ஒருவர் இங்கிலீஷில் மொழிபெயர்த்துள்ள இங்கிலீஷின் மொழிபெயர்ப்பே என்பது வெளிப்படை. அது தவறானதென்று கண்டனம் செய்யும் மௌல்விகள், நேரே குர்ஆன் ஷரீபை சரியான படி மொழிபெயர்க்கத் தக்க ஆற்றலுடையவர்களாக விருக்கும்பொழுது மையில், அவர்கள் நம்முடைய குருபிதாவின் குர்ஆன் மொழிபெயர்ப்பைக் காப்பியடிக்கிறார்கள் எனக்கூறுவது, எவ்வளவு அபாண்டப் பொய் என்பது நம்முடைய குருட்டுக் கண்ணுக்கும், இருள் சூழ்ந்த ஹிருதயத்திற்கும் புலப்படவில்லை போலும். நம்முடைய குருபிதா குர்ஆனையே தாம் இயற்றியதாக வரைந்துள்ளவர், எதைத்தான் கூற மாட்டார். மௌல்விகள், மௌலானக்கள் முதலிய பெரியார்களை அநியாயமாகவும், அதிக்கிரமமாகவும் தூஷிப்பதுடன், அவர்களிடமே நபிகள் நாயகமவர்களுடைய வாக்கியம் முதலிய மார்க்க சம்பந்தமான விஷயங்களை பிச்சை வாங்கித் தமது பத்திரிகையில் தாம்விளைந்ததாக பாவனைகாட்டிப் பிரசுரிப்பது, நம்முடைய குருபிதாவின் தொழிலாக இருக்கிறது. ஆனமைப் பற்றியே, மற்றவர்களையும் தம்மைப் போல் மதித்து, தம்முடைய மொழிபெயர்ப்பை பிறர் காப்பி அடிப்பதாகக் கூறுகிறார்.

கூடற்குமாரனே! மார்க்க கல்விச் சாலையின் வழியையே தாம் அறியாமல், போனதற்கு ஆனந்தப்படும் நம்முடைய குருபிதா இல்லாம் மார்க்க விஷயமாக எழுதவும், பேசவும் என்ன நியாயமிருக்கிறது? அவர் எந்த கிதாபுகளைப் பார்த்து எழுதுகிறார்? அக்கிதாபுகள் எப்பாஷையிலுள்ளவை என்ற விவரத்தை நீர் தெரிவிப்பீரா? மார்க்கக் கல்வி வாடையைக்கூட பெறாத, நம்முடைய குருபிதா வாழ்நாள் முழுவதையும் போக்கி, சொற்பமாகக் கற்ற இங்கிலீஷ் பாஷையில் வடஇந்தியா காதியானி அஹ்மதியாக்கள், சுன்னத்துவல் ஜமாஅத்தின் கொள்கைக்கு மாறாக வெளியிட்ட சில நூற்களைக் கண்டு, வேறு விதத்தில் மார்க்கக் கல்வி சிறிதளவும் கற்காத நம்முடைய குருபிதா மதிமயங்கி, அதை நம்பி அஹ்மதியாக்களின் தவறான கொள்கைகளைப் பின்பற்றி, படுகுழியில் தாம் விழுந்ததுமட்டுமின்றி, மற்ற பாமர முஸ்லிம்களையும், தாம்விழுந்துள்ள படுகுழிக்கு இழுத்துவருகிறார் என்பதன் உண்மை, சுன்னத்துவல் ஜமாஅத்துக் கொள்கையுடைய எவர் தான் அறியாமலிருக்கிறார்கள்? அத்தகைய நம்முடைய குருபிதா அபூர்வசக்தியால் தமிழ்நாட்டு முஸ்லிம்களுக்கு

ஏதேதோ சாதித்துவிட்டதாக நீர் பிதற்றுகிறீர். இது நும்முடைய அறியாமையே அல்லாது வேறில்லை.

கூடற்குமரனே! நும்முடைய குருபிதாவின் தவறுதலான கொள்கையையும், அவரின் பிரசுர நூற்களையும் கண்டனஞ் செய்வது போல், ஆரிய சமாஜிகளால் வெளியிடப்பட்டுள்ள சத்தியார்த்தப் பிரகாசத்தை முஸ்லிம் பத்திரிகாசிரியர்களும், உலமாக்களும் கண்டனஞ் செய்யவில்லை என்று நீர் வரைந்துள்ள பதர்மொழி பிசகென்பதையும், பத்திரிகாசிரியர்களும், உலமாக்களும் சத்தியார்த்தப் பிரகாச விஷயமாகச் செய்யவேண்டியதைச் செய்தேவருகிறார்கள், என்பதை மேலே நான் விளக்கிக் கூறியிருக்கிறேன். என்றாலும், நுமக்கு வேறு விதமகாவும் பதில் கூறவிரும்புகிறேன். அஃதாவது :—

ஆரிய சமாஜிகள் இஸ்லாத்திற்கு இதர மதவாதிகள் என்பதையும், இஸ்லா மார்க்கக்கல்வி தங்களுக்கில்லை என்பதையும் அவர்கள் ஒப்புக்கொண்டிருப்பதால், அவர்கள் நம் குர்ஆன் ஷரீபுக்கு தப்பாகவும், தவறாகவும் அர்த்தங்களை எழுதியும், கண்டனஞ்செய்தும் இருப்பதைக் கண்ணுறும் படித்தவர்கள், பாமரர்கள் முதலிய எல்லா முஸ்லிம்களும் ஆத்திரமும், ஆவேசமும் கொண்டு அதையொழிக்க முன்வருவார்களே இன்றி அதைப்பார்த்து, ஒப்புக்கொண்டு எந்தபாமர முஸ்லிம்களும் வழிகெட்டுப் போகமாட்டார்கள் என்பது திண்ணம். நும்முடைய குருபிதாவோவெனில் மார்க்கக் கல்வி ஞானமில்லாதிருக்கக் கல்விமானென்றும், சுன்னத்துவல் ஜமாஅத்தின் உண்மையான கொள்கைக்கு மாறுபட்ட கொள்கையுடையவராக விருந்தும், தாம் நேரான கொள்கையுடையவர் என்று பறைசாற்றி பசப்புவதால், நும்முடைய குருபிதாவையும், அவரின் தவறான நூற்களையும் கண்டு, நும்போன்ற அறிவிலிகள் பலர் அவைகளைப் பின்பற்றி வழிகெட்டுப் போகிறபடியால், ஆரியர்கள் குர்ஆன் ஷரீப் முதலியன மார்க்க நூற்களை தப்பும், தவறுமாக வெளியிடுவதால் முஸ்லிம்களுக்கு உண்டாகும் தீங்குகளைப் பார்க்கிலும், நும்முடைய குருபிதாவால் தப்பும், தவறுமாக வெளியிடப்படும் குர்ஆன் மொழிபெயர்ப்பு முதலிய நூற்களால் அதிக தீங்குகள் உண்டாகின்றன வென்பது எனது அபிப்பிராயமாகும். ஆனமைப்பற்றி, உலமாக்களும், மார்க்க ஞானம் முதிர்ந்த பத்திரிகாசிரியர்களும் நும்முடைய குருபிதாவின் கொள்கைகளையும், அவ்விதக் கொள்கையுடன் அவரால் வெளியிடப்படும் நூற்களையும், கண்டனம் செய்வது அவர்களின் முதற் கடமையாகும், மேலும், கிறிஸ்தவர், ஆரியர் முதலிய இதர மதவாதிகள் இஸ்லாம் மார்க்க விரோதமாக வெளியிடும் நூற்கள் தவறென்பதை

நிரூபிக்க சபைக்கு அவர்கள் அழைக்கப்பட்டால் வந்தாக வேண்டும். தவறை முஸ்லிம்கள் எடுத்துக் காட்டினால் அதை அவர்கள் ஒப்புக் கொண்டாக வேண்டும். அவ்வாறு அவர்கள் சபைக்கு வராவிட்டா லும், முஸ்லிம்களால் எடுத்துக் காட்டப்படும் தவறுகளை ஒப்புக் கொள்ளாவிடினும், முஸ்லிம்கள் அரசாங்க நீதிமன்றத்தில் விவகாரம் துவங்கியும் அதை மறுத்து விடலாம். அரசாங்க நீதிபதிகள் இதர மதஸ்தராயிருந்தாலும், இஸ்லாம் மதம் இதர மதவாதிகளுக்கு நன்கு தெரியாதென்பதை அரசாங்க அதிகாரிகள் உணர்ந்து, இதர மதஸ்தர்களின் கூற்றை இலகுவாக ரத்துச் செய்துவிடுவார்கள்.

நும்முடைய குருபிதாவோவெனில் சபைக்கு அழைக்கப் பட்டாலும் வருவதில்லை. தவறை எடுத்துக் கூறினாலும் ஒப் புக்கொள்ளுவதில்லை. கேள்வி கேட்டால் பதில் கூறுவதில்லை. கோர்ட்டில் இது சம்பந்தமாக விவகாரம் தொடங்கவும் முஸ்லிம் அரசாங்கக் கோர்ட்டு இல்லாமையாலும், நும்முடைய குருபிதாவானவர் தாம் ஒரு முஸ்லிம் என்றும், தமது கொள்கை சுன்னத்துவல் ஜமா அத்துக் கொள்கைகளுக்கு ஏற்றதென்றும் சொல்லிக் கொள்ளுவதாலும் முஸ்லிம்களுக்குள் உள்ள கொள்கை வித்தியாசங்களை நுட்பமாக அறிந்து, இஸ்லாம் மார்க்கக் கட்ட ளைப்படி தீர்ப்புச் செய்யும் ஆற்றல் அந்நிய மத நீதபதிகளுக்கில் லாமையாலும் அவ்வாறும் செய்யமுடியாமலிருக்கிறது. எனவே, நும்முடைய குருபிதாவின் தவறான கொள்கைகளும், அவருடைய நூல்களும் நும்மைப்போன்ற தமிழ்நாட்டு பாமர முஸ்லிம்களை வழி கெடுத்து, பெரும் சங்கடத்திலாக்கி யிருப்பதாகவே கூறவேண்டியதா யிருக்கிறது. இது தமிழ்நாட்டு முஸ்லிம்களின் துர் அதிர்ஷ்டமே யன்று வேறில்லை. முடிவாக நும்முடைய குரு பிதாவினிடம் சில கேள்விகளைக் கேட்க விரும்பி, அவைகளைக் கீழே குறிப்பிடுகிறேன். அவைகளுக்கு நும்முடைய குருபிதாவை பதில் கூறும்படி நீர் செய் யும் பட்சத்தில், நும்முடைய குருபிதாவின் கொள்கைகள் சுன்னத்து வல் ஜமாஅத்தின் கொள்கைக்கு ஏற்றதாயிருக்கின்றனவா, அல்லது அஹ்மதியாக்களின் கொள்கைகளுக்கு ஏற்றனவா யிருக்கின்றனவா என்பது, நும்முடைய குருட்டுக் கண்ணுக்கும் புலனாகிவிடும். அக் கேள்விகள் கீழ்வருமாறு :—

(1) நபிகள் நாயகம் மிஃராஜுக்கு சென்றது ஜடலத்துடனா? அல் லது ரூஹ்மட்டிலுமா?

(2) ஹஜ்ரத் ஈஸா நபி அவர்கள் ஜடலத்துடன் வானலோகத்தி ற்கு உயர்த்தப்பட்டிருக்கிறார்களா? அல்லது மரணமாகிவிட்டார்களா?

(3) நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் விவாக மில்லாத மரியும் அலைஹிஸ்ஸலாமவர்களின் வயற்றிலிருந்து தகப்பன் இல்லாமல் பிறந்தார்களா? அல்லவா?

(4) கடைசி காலத்தில் உலகிற் தோன்று வார்களென்று கூறப்பட்டவர்களாகிய, மஹ்தி அலைஹிஸ்ஸலாம் தோன்றி மறைந்து விட்டார்களா? அல்லது பின் தோன்றுவார்களா?

(5) காதியான்னியில் தோன்றி மறைந்த மிர்ஸா குலாம் அஹ்மது காபிரா? அல்லவா?

(6) அரபி பாஷையில் நமது மார்க்க நிபுணர்களான முன்னோர்களாகிய பெரியோர்கள் குர்ஆனுக்கு எழுதியுள்ள தப்ஸீர்களை நம்புகிறீர்களா? அல்லது லாஹூர் முஹம்மதலியின் இங்கிலீஷ் தப்ஸீரை ஒப்புக் கொள்ளுகிறீர்களா?

(7) ஆண்டவன் எக்காரியத்தையும் தனதிஷ்டப்படி செய்ய சக்தி வாய்ந்தவனா? அல்லவா?

(8) நரகம் சுவர்க்கம் உண்டா இல்லையா?

(9) உலக முடிவுக்குப் பின் மானிடர்களுக்கு கேள்வி கணக்கு, நன்மை தின்மை, நிறை முதலியவை உண்டா? அல்லது இல்லையா?

மேற்கண்ட வினாக்களுக்கு நும்முடைய குருபிதாவை ஒழுங்கான முறையில் பதில் கூறும்படி செய்வதுடன், பத்திராதிபர்களையும், உலமாக்களாகிய பெரியார்களையும் தூஷிக்கும் துற்குணத்தை நீரும், நும்முடைய குருபிதாவும் இனியாகிலும் விட்டு அடங்குவீர்களாக. இன்றேல் இதைவிட விவரமாகவும், கடினமாகவும் கண்டனம் வரையப்படும் என்பதை, இதன் மூலமாக நுமக்கும், நும்முடைய குரு பிதாவுக்கும் எச்சரிக்கை செய்கிறேன். (ஸை-இ)

மார்க்க ஊழியமும் ஸஹாபாக்களும்.

இஸ்லாம் மார்க்கப் பிரசாரத்தை கண்ணியம் வாய்ந்த, ஸஹாபாக்கள் இஸ்லாம் ஆரம்ப முதற்கொண்டு, இறுதிவரையில் நிலைக்கச் செய்துவிட்டனர். எல்லோரிலும் முதன்மையாக, ஹஜ்ரத் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவிக் கொண்டதன் பின்பு, அவர்களுடைய நற்குணத்தினால் அவர்கள் காலத்தில் ஒரு தொகையினர் இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்தனர். அஷாரதுமுப்அஷ்ஷரா'வென்ற நன்மாராயம் அருளப்பட்ட கண்ணியம் வாய்ந்த பத்துபேர்களில் ஐவர் அதிலுள்ளவர்களே.

ஹஜ்ரத் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சமூகம் குரைஷி வகுப்பார்கள் கல்வி, அனுபோகம் ஆகியவைகள் பெற்றிருப்பதுடன் வந்து கொண்டிருப்பார்கள். அவர்களின் நற்குணமான சமூகம் வீற்றிருப்பது, அவர்கள்பேரில் நட்பு ஆகியவைகளுடையவர்களாயிருந்தார்கள். ஹஜ்ரத் அவர்களுக்கு அவர்களில் எவர்பேரில் நன்னம்பிக்கை இருந்தனவோ அவர்களை இஸ்லாத்திற்கு அழைத்தார்கள். ஆகவே, அவர்களின் கரத்தில் ஹஜ்ரத் ஜுபைர் பின் அவா'ம், ஹஜ்ரத் உதுமா'னிப்னு அப்பா'ன், ஹஜ்ரத் தல்ஹா' பின் உபை' துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹும் அவர்கள் இஸ்லாமைத் தழுவிக் கொண்டார்கள். (அஸதுல் காபா)

மேற்கூறிய கண்ணியவான்களன்றியும், ஹஜ்ரத் ஸ'அ'திப்னு அபி'வகா'ஸ், அப்துர் ரஹ்மா'னிப்னு ஔப், உதுமா'னிப்னு முள்'ஊ'ன், அபூ உபைதா பின் ஜர்ரா'ஹ், அபூ'ஸல்மா'னிப்னு அப்துல் அஸத், அர்'கம் பின் அபில் அர்கம் ரலியல்லாஹு அன்ஹும் போன்றவர்களும் இஸ்லாமில் சேர்ந்தார்கள். (தாரீக் கமீஸ் 287-வது பக்கம்.)

ஹஜ்ரத் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தவிரவும், மற்றும் அநேக ஸஹாபாக்களும் முயற்சி செய்ததைக் கொண்டும், குரைஷி வம்சத்தார்களுக்கிடையில் இஸ்லாம் பரவிற்று. ஹஜ்ரத் அமைர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இஸ்லாமின் ஆரம்பகாலத்தில் கொடிய விரோதியாகவிருந்தார்கள். பதர் யுத்தத்தில் அவருடைய குமாரர் ஒருவரை ஸஹாபாக்கள் கைதியாகப் பிடித்துக்கொண்டனர். ஆகவே, அவரை விடுவிப்பதற்காக மதீனாவிற்கு சென்று, நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை முடிவு செய்துவிட நாடிச்சென்றார். (நவூ'து பில்லாஹ்) ஆனால், அதிபரிசுத்த நாயன் அவருக்கு அருள் புரிந்து விட்டான். ஆகையினால், அவர் மதீனாவிற்கு வந்து இஸ்லாமாகிவிட்டார். அவர் திரும்பிப் போய் குரைஷிகளை இஸ்லாத்திற்கு அழைத்தார். அதன் மூலமாய் அநேகர்கள் இஸ்லாமானார்கள். (அஸதுல் காபா)

ஆடவர்களன்றியும், இம்மேன்மையான காரியத்தில் மாதர்களும் ஈடுபட்டிருந்தார்கள். ஹஜ்ரத் உம்மு ஷரீக ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் ரகசியமாய் குரைஷி வம்சத்துப் பெண்களை இஸ்லாமில் அழைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், இவர்களின் விஷயம் குரைஷிகளுக்குத் தெரிந்ததும், அவர்களை மக்காவிலிருந்து வெளியாக்கிவிட்டார்கள். (அஸதுல் காபா)

அக்கண்ணியவான்களின் நன்முயற்சியின் பலனாகிறது, மக்கமா நகரத்தையும், குரைஷிகளையும் மட்டும் சூழ்ந்திருக்கவில்லை. ஆனால்,

அல்லாஹுதஆலா அநேக ஸஹாபாக்களுக்கு நல்லருள் புரிந்து விட்டான். அதனால், ஹஜ்ரத் அபூதர் கப்பாரீ, ஹஜ்ரத் துபை' லிப்னு உமரு' தூஸி, ஹஜ்ரத் அக்தம் ஹஜ்ரத் உர்வாஹ்பின் மஸ்ஊத் தக்பா ரலியல்லாஹு அன்ஹும் போன்றவர்கள் மற்றவிடங்களி லிருந்தும் வந்து, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்க ளின் பரிசுத்த கரத்தில் இஸ்லாமாகி, திரும்பிச் சென்று தங்கள் தங் கள் சமூகத்தினரை இஸ்லாமில் அழைக்கும் பிரசாரத்தை ஆரம் பித்தார்கள். ஆகவே, அப்பரிசுத்தமான காரியம் முடிவு பெற்றது.

அன்ஸாராகிய மேற்கூறப்பட்டவர்களில், ஹஜ்ரத் அபூதர் கப் பாரீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் குணங்கள் விசேஷமாய் மதிக்கத்தக்கது. அவர்கள் இயற்கையாகவே நன்மைகளை ஒப்புக் கொள்ளக் கூடியவர்களாய் இருந்தார்கள். நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைச் சந்திப்பதற்கு முன்பிரு ந்தே தொழுகிறவர்களாக விருந்தார்கள். ஒருதடவை நற்சமயமாக அவர்களுடைய சகோதரர் ஹஜ்ரத் அனீஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மக்காவிற்கு வந்துவிட்டுத் திரும்பிப் போனவர்கள், ஹஜ் ரத் அபூதர் கப்பாரீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் அறிவித்த தாவது:—மக்காவில் "முஹம்மது" என்றொருவர் நீவிர் அனுஷ்டிக் கும்படியான அனுஷ்டானங்களை ஜனங்களுக்குக் கற்பித்து, தான் அல்லாஹுதஆலாவின் ரசூல் என்றும் சொல்லுகின்றார். ஜனங் கள் அவரை புலவன், சூனியக்காரன், குறிகாரன் என்று பலவாறு சொல்லுகின்றனர். ஆனால், முஹம்மதுடைய போதனையாகிறது ஜனங் கள் சொல்லுவதற்கு மாற்றமாகத் தெரிகின்றது என்றார்கள். இதைக் கேட்டு, ஹஜ்ரத் அபூதர் கப்பாரீ ரலியல்லாஹுஅன்ஹு அவர்களின் ஹிர்தயத்தில் "மக்காவிற்குச் சென்று இதைத் தீரவிசாரிக்க வேண் டும்" என்னும் அவாமேலிட்டது. ஆகவே, மக்கமாநகருக்கு வந்தார் கள். ஓர் நாள் இரவு ஹஜ்ரத் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலை ஹிவஸல்லம் அவர்கள், ஹஜ்ரத் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடன் கஃபாவைப் பிரதக்ஷணம் செய்வதற்காகச் சென்று, அவ்விடத்தில் நாயகம்அவர்கள் தொழுது கொண்டிருந்தார்கள். அச் சமயம் அவ்விடமிருந்த அபூதர் கப்பாரீ ரலியல்லாஹுஅன்ஹு அவர் கள் நாயகம் அவர்கள் தொழுது முடிந்ததும், இஸ்லாமானவர்கள் ஸலாம்சொல்லும் விதமாய் ஸலாம்சொன்னார்கள். நாயகம் அவர்கள் அபூதர்கப்பாரீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் எல்லா விஷயங்க ளையும் விசாரித்துக் கொண்டார்கள். ஹஜ்ரத்அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இவ்விரவு அபூதர் கப்பாரீ ரலியல்லாஹு

அன்ஹு அவர்களுக்கு விருந்தளிப்பதாயக் கேட்டுக்கொண்டதன் பேரில் அவர்களும் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களும் சென்றார்கள். ஹஜ்ரத் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வீட்டையடைந்ததும் உள்ளிருந்து இன்பம் பொருந்திய வந்தத திராட்சைப் பழத்தைக் கொண்டுவந்து புசிக்கச் செய்தார்கள். இதற்குப் பிறகும் இரண்டு தடவைகள் ஹஜ்ரத் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நாயகம் அவர்களிடம் வந்தார்கள். அப்போது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஹஜ்ரத் அபூதர் கப்பாரீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களைப் பார்த்து நான் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செல்லும்படி உத்திரவு கிடைத்திருக்கிறது. நீர் உம் சமூகத்தினருக்கு என்னுடைய புறத்திலிருந்து இஸ்லாமை எத்திவைப்பீரா? (அப்படிச் செய்வீராயின்) ஒரு சமயம் உம்முடைய சமூகத்தினருக்கு அல்லாஹுதஆலா இஸ்லாமைக் கொண்டு பலனடையச் செய்து உமக்கும் நன்மையை யளிப்பான் எனக் கூறினார்கள். அதேபோல் அவர்கள் மதீனாவிற்கு திரும்பிச் சென்று தங்கள் சகோதரர் அனீஸ் அவர்களின் இல்லத்திற்கு அடைந்தார்கள். அவர் உடனே வெகு சந்தோஷத்துடன் இஸ்லாமானார்கள். பின்பு தங்கள் தாயார் அவர்களையும் மற்றெல்லா ஜனங்களையும் இஸ்லாமிற்கு அழைத்தபோழுது அவர்களின் தாயாரும் பகுதி ஜனங்களும் இஸ்லாமிலானார்கள்; மற்றப்பகுதியினர் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத்து வந்ததும் இஸ்லாம் மதத்தைத் தழுவிக்கொள்வோமென்றனர். அதேபோல் நாயகம் அவர்கள் மதீனாவிற்கு விஜயம் செய்த போழுது இஸ்லாமை யடைந்தார்கள். கப்பாரீ வகுப்பினர்களுக்குப் பக்கத்தில் வசித்திருந்த அஸ்லம் என்னும் வகுப்பார்கள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சந்நிதானத்தை யடைந்து யாரசூலல்லாஹ்! எங்கள் சகோதரர் எதன் பேரில் இஸ்லாம் மார்க்கத்தை யடைந்தனரோ? அதன் பேரில் நாங்களும் இஸ்லாமைப் பின்பற்றுகிறோம் என்றனர். இதைக்கேட்டு, நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அல்லாஹுதஆலா கப்பாரீ வகுப்பினரின் பாபங்களைப் பொறுத்து அஸ்லம் வகுப்பாரை சாந்தியாக்கி வைப்பானாக! என்று ஆசீர்வாதம் கூறினார்கள் (ஸஹீஹ் முஸ்லிம்—கிதாபுல் பளாயில்)

(தொடரும்)

சந்தா நேயர்களுக்கு ஓர் அறிக்கை.

1. சந்தாதாரராகச் சேருகிறவர்கள் முதற் பணம் கட்டியாவது, அல்லது வி. பி. போஸ்டிலாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளவேண்டும். ஆனால், வி. பி. மூலமாய் தருவிப்பதில் நேயர்கள் இரண்டணு அதிகமாய் கட்ட வேண்டியதிருப்பதையும், காலதாமதம் ஏற்படுகிறதென்பதையும், அறிந்து கொள்ளுவார்களாக.

2. சந்தாதாரர்கள் பத்திரிகாலாயத்திற்கு எழுதும் ஒவ்வொரு காரடு, லட்டர், மணியாடர் கூப்பன் முதலியவைகளில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்தெழுத வேண்டும். பதிலறிய விரும்புவோர் ரிப்ளைக் காரடாவது ஸ்டாம்பாவது அனுப்பவேண்டும்.

3. அல்லாஹுதஆலாவின் கிருபையைக் கொண்டு 1927வரு ஜனவரி மாதமுதல் "அல்கலாம்" மாதாரம்பத் தேதியில் போஸ்டு செய்து வருகிறோம். ஆகவே, சஞ்சிகைக் கிடைக்கப் பெறாதவர்கள் அம்மாதம் 10உக்குள் தெரியப்படுத்த வேண்டும். காலங்கடத்தித் தெரிவிப்போர்களின் நிருபங்களும், சந்தா நம்பரைத் தெரியப்படுத்தாத நிருபங்களும் கவனிக்கப்படமாட்டாது.

சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள் நாடுகளுக்கு		ரூ. 3—0—0
பொது ஸ்தாபனத்திற்கு	,,	ரூ. 2—0—0
மாணவர்களுக்கு	,,	ரூ. 2—0—0
பினங்கு, சிங்கை, சைகோன், ஜாவா, சுமத்ரா முதலிய வெளி நாடுகளுக்கு	,,	ரூ. 4—0—0

"அல்கலாம்" ஆபீஸ்.

42, தம்புச் செட்டித் தெரு, ஜி. டி. மதராஸ்.